

# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

October 2021 அக்டோபர் 2021

Retail Selling Price 20

Page 1

Volume - 13, Issue - 8

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித்**

**யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 240/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 1800 /- |

**சந்தா தொகை அனுப்ப முகவரி மாற்றம் மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 994378 6269- 99445 76165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 750 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 7000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 400 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 300 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 3000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**
**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**
பாகிரா காம்ப்ளக்ஸ் 74, பழனிரோடு.
திண்டுக்கல் – 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
**கலீஃபா.** A.N.M. **லியாகத் அலி,** B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165

செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி
**S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ**
**கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்**
229/ 4, மீரா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி,
ஃபயர் சர்வீஸ் எதிரில், திண்டுக்கல் – 624 001.
**CELL : 99445 76165**
**Website:www.emsabai.org**
**email: aalimpulavar07 @ gmail.com**
**email: j.mdrahmathulla@yahoo.com**

# மறை ஞானப்பேழை

**ஸஃபர்– ரபீவுல் அவ்வல்**

**அக்டோபர் 2021**
**Volume - 13 Issue -8**

## பேழைக்குள்......

*ஜமாலிய்யா தோட்டத்தில்.....*
*திருமறைப் பக்கம்.*
*ஹதீஸ் பக்கம்.*
*அமுத மொழிகள்.*
*ஸுப்ஹான மவ்லிது....*
*தொப்பி அணியும் தோழர்களே!*
*மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்)*
*ஹள்ரத் நிஜாமுத்தீன் அவ்லியா.*
*பவிஷ்ய புராணத்தில் பயகம்பர் நபி.*
*ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை.*
*முத்தமிழ் ஞானி.*
*கிருத்தவ வேதத்தில் திருத்தூதர்*
*அன்னை ஆயிஷா (ரலி)*
*இனிக்கும் இறைமொழி.*
*இஸ்லாத்தின் உண்மை!*
*மற்றும் பல் சுவை செய்திகள்.*

# பெருமானார் பிறந்த நாளில்...

அகிலத்தின் அருட்கொடை அண்ணலெம் பெருமானார் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரித்த ரபீவுல் அவ்வல் மலர்கிறது.

அண்ணலார் அவதரித்த அன்று, இப்பிரபஞ்சத்தில் இயற்கையில் பல ஆச்சரியமான நிகழ்ச்சிகள் அரங்கேறின.

வானில் நட்சத்திரங்கள் அங்குமிங்கும் ஒளியுமிழ்ந்து பூமியில் வீழ்ந்தன. வரண்டிருந்த ஆறுகள் நீர் பெருக்கி ஓடின. நீர் நிறைந்து ஓடிய ஆறுகள் வற்றி வரண்டு போயின.

மக்கள் வணங்கிவந்த தெய்வச்சிலைகள் தலை கவிழ்ந்து தரையில் வீழ்ந்தன.

பாரசீக நாட்டில் ஆயிரம் ஆண்டுகள் அணையாமல் தொடர்ந்து எரிந்த, மஜூஸிகள் வணங்கி வந்த நெருப்பு நூர்ந்து அவிந்தது.

கிஸ்ரா – ரோம அரசர்களின் கோட்டைகள், குவிமாடங்கள் கலகலத்து பிளந்து உடைந்து விழுந்தன. ஐயறிவு மிருகங்கள் தெளிவாகப் பேசின.

இயற்கையில் நிகழ்ந்த இம்மாற்றங்களை ஏற்பதில் சிலருக்குத் தயக்கம்.

ஆனால்,

குர்ஆன், ஹதீஸ்களை தூய்மையான மனதுடன் ஆராய்வோர் இவற்றை மறுப்பதில்லை. ஏனென்றால் இவற்றையெல்லாம் நடத்துவதற்கு அல்லாஹ்வுக்கு எந்த சிரமமும் இல்லை.

தனது ஹபீபின் வருகையை கண்ணியப்படுத்துவதற்காக அல்லாஹ் நடத்திய இம்மாற்றங்களை நம்ப வேண்டுமானால். மனிதர்களின் நற்செயல்களால் இயற்கையில் மாற்றங்கள் நிகழும் என வந்திருக்கும் நபி மொழிகளை அவர்கள் ஆராய வேண்டும்.

**மனிதர்கள் செய்யும் பாவங்களால் பஞ்சம் ஏற்படும்,... தீய ஒழுக்கம் மிகைத்தால் பூகம்பங்கள் ஏற்படும்... ஏழைகளின் சாபம் இன்னல்களைக் கொண்டுவரும்... எனவெல்லாம் வரும் ஹதீதுகளிலிருந்து இதற்கான ஆதாரத்தை நாம் எடுக்க முடியும்.**

**இயற்கை தன் கோபத்தை– தன் வெறுப்பை உலகில் வெளிப்படுத்த முடியுமானால், அது தன் மகிழ்ச்சியை, ஆனந்தத்தை வெளிக்காட்ட முடியுமல்லவா?**

**ஆம்! இயற்கை வெளிப்படுத்திய மகிழ்ச்சிதான் நாம் மேலே கண்ட இயற்கை அற்புதங்கள்!**

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



முழுமையான ஞான விளக்கத்தைத் தருவதற்காகவே தான் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வுலகிற்கு வந்தார்கள். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தவ்ஹீத் தான் முக்கியமான தவ்ஹீத் ஆகும். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லித் தந்த தவ்ஹீதை விளங்கிக் கொண்டால் அதுவே போதுமானதாகும்.

– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

# ஜமாலிய்யாத் தோட்டத்தில்

ரபீஉல் அவ்வல் மாதம் பிறந்ததும் உலகமெங்கும் வாழும் மக்கள் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். ரசூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிறந்தது முதல் மறையுமளவுள்ள எல்லா விஷயங்களையும் காரண காரியங்களை எடுத்துக்காட்டி கதைக்கிறார்கள். சொற்பொழிவாற்றுகிறார்கள். மேடை தோறும் பேசுகிறார்கள்.

ஆனால்,

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றி அவர்களால் அறிய முடியவில்லை. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் யார் என்பதை அறியவில்லை. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நாம் செய்கிறோமா என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லியவை அனைத்தும் உண்மைதான் என்பதையும் அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதை பிழை எனக்கூறக்கூடிய கூட்டம் (இஸ்லாத்தில்) ஒன்றும் இருக்கின்றது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை, அவர்கள் ஹக்கின் பரிபூரணத் தோன்றல் எனும் உட்கருத்துக்காகவும் அவர்களின்றேல் பரிபூரண பரிசுத்த சாந்தமான நல்வாழ்வு மானிடர்கள் எய்தி இருக்க மாட்டார்கள் என்பதற்காகவும் அவர்களின் அருங்குணம், வீரம், செயலாற்றும் தன்மை போன்ற மற்ற எண்ணற்ற நற்காரியங்களுக்காகவும் எம் உள், வெளி இரகசியங்கள் கொண்ட பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்பதற்காகவும் அவர்களை நான் உள்ளார நேசிக்கின்றேன்.

*(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)*

## கொய்த மலர் கொய்த மலர்

# நபியே ! நாயகமே!



(நபியே!) அல்லாஹ்வின் மாபெரும் அருளாலே நீங்கள் இவர்களிடம் மென்மையாக நடந்துகொள்கின்றீர்கள். நீங்கள் கடுகடுப்பானவராகவும் வன்னெஞ்சராகவும் இருந்திருந்தால் இவர்கள் அனைவரும் உங்களைவிட்டும் விலகிப் போயிருப்பார் கள்.(3.159)

(நபியவர்கள்) உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கு ரஹ்மத்தாக இருக்கின்றார்கள். (9.61)

நிச்சயமாக உங்களிலிருந்து ஒரு தூதர் உங்களிடத்தே வந்துள்ளார். நீங்கள் வருத்தப்பட்டீர்களானால் அதனிமித்தம் அவர் மிகத்துன்பப்படுகிறவர். (அவர் உங்களிடத்தே மிக்க அன்புள்ளவர்.(அவர்கள்) நம்பிக்கையுடையவர்களிடத்தே மிக்க தயாளுவும் மிக்க கருணாகரருமாவார்கள். (9.128)

(நபியே) இவர்கள் இந்த அறிவுரையின்மீது நம்பிக்கை கொள்ளவில்லையானால் இவர்களின் பின்னே கவலைப்பட்டு உங்களது உயிரை மாய்த்துக் கொள்வீர்போல இருக்கிறதே! (18.6)

(நபியே) நாம் உங்களை அகிலத்தாருக்கு அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை. (21.107)

உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது. (33.21)

மேலும் நிச்சயமாக நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள். (68.4)

நபியே! சாட்சியாளராகவும் நன்மாரயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அல்லாஹ்வின் பால் அவனுடைய கட்டளைப்படி அழைக்கிறவராகவும் சுடர்வீசும் ஒளிவிளக்காகவும் நாம் உம்மை அனுப்பியுள்ளோம். (33-45,46)

அல்லாஹ் நபிமார்களிடம் இவ்வாறு உறுதிமொழி வாங்கிய நேரத்தை நினைவு கூருங்கள்: நான் (இப்போது) உங்களுக்கு வேதத்தையும் நுண்ணறிவையும் வழங்கியிருக்கிறேன். இனி ஏற்கனவே உங்களிடமுள்ளவைகளை மெய்ப்படுத்தக்கூடிய வேறோர் இறைத்தூதர் உங்களிடம் வந்தால் கண்டிப்பாக அவர்மீது நம்பிக்கைகொண்டு நீங்கள் அவருக்கு உதவி புரிந்திடவும் வேண்டும். (இவ்வாறு கூறிவிட்டு) அல்லாஹ் வினவினான். இதனை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? மேலும் இதற்காக நீங்கள் செய்துகொண்ட பெரும் ஒப்பந்தத்தை (அதனால் ஏற்படும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்கிறீர்களா? அவர்கள் (ஆம்) நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என்றார்கள். (3-3-81,82)

# அண்ணலாரின் அகமியம்!

ஹதீஸ் பக்கம்

பூலோகத்தினுள் பொதிந்து கிடக்கும் பொக்கிஷங்களின் சாவிகள் என்னிடம் தரப்பட்டுள்ளன. அத்திறவுகோல்கள் என் இரு கரங்களிலும் வைக்கப்பட்டன. (புகாரீ

ஒருசமயம் ஹள்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் பெருமானாரிடம் யா ரஸலல்லாஹ்! நான் அறபு இலக்கியமறிந்த மேதைகளிடையே சுற்றியவன். அறபு மொழி வல்லுனர்கள், பெரும் கவிஞர்கள், கற்பனையில் வல்லவர்களையெல்லாம் சந்தித்துள்ளேன். என்றாலும் எழுதவும் படிக்கவும் தெரியாமலிருந்தும் தாங்களைப்போன்று மொழித்திறமையாலும் இலக்கிய நயத்தாலும் வல்லமைமிக்க வசீகர நாவன்மையுடைவரை நான் பார்த்ததேயில்லையே என வியந்துரைத்தபோது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்தபனீ ரப்பீ எனது ரப்பே எனக்கு அந்த ஆற்றலை அருளியிருக்கின்றான் என விடையிறுத்தார்கள்.

அண்ணலார் அருளினார்கள்: நீங்கள் பார்க்காதவைகளையும் நான் பார்க்கின்றேன். உங்கள் காதுகளால் கேட்க முடியாதவைகளையெல்லாம் நான் கேட்கிறேன். (அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூ தர்தா (ரலி). நூல்.திர்மிதீ)

பீபி மைமூனா (ரலி) அவர்கள் இல்லத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கியிருந்தபோது, ஒரு நாள் தஹஜ்ஜுத் தொழுகைக்காக உறக்கத்திலிருந்து எழுந்து உளூ செய்து கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென லப்பைக்க (பதில் தருகிறேன்) என மூன்று முறை கூறினார்கள். பின்பு நுஸிர்த்த (நீர் உதவி செய்யப்படுவீர்) என்றும் மும்முறை கூறினார்கள். வீட்டிலிருந்த மைமூனா (ரலி) அவர்கள் ஆச்சரியப்பட்டு யாரஸுலல்லாஹ்! தாங்கள் இப்போது யாருடன் பேசினீர்கள், இங்கே நம் வீட்டிலே என்னைத்தவிர வேறு யாருமில்லையே! எனக் கேட்டபோது, “ நம்மைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர் – பனீ கஃபு என்பவர் மீது மக்கா முஷ்ரிகீன்கள் பல கொடுமைகள் செய்கிறார்கள். அக்கொடுமை தாங்காமல் இந்நேரம் என்னிடம் உதவி தேடி அழைத்தார். அவருக்கு பதிலளித்தேன்” என பதிலளித்தார்கள்.

ஸஹாபாக்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: நாங்கள் வெயில் காலங்களில் வேலை செய்துகொண்டிருப்போம். எங்களுக்குக் களைப்பு ஏற்படுமானால் பள்ளிவாசல் பக்கமாக வந்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்ளைக் கண்களால் நோக்குவோம். அவர்களைப் பார்த்ததுமே எங்களின் களைப்புகளெல்லாம் அகன்று எங்கள் முகத்தில் தெளிவும் சுறுசுறுப்பும் உண்டாகிவிடும்.

# ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை (குளோபல்) உலகளாவிய இணைய வழி (ZOOM)

# மீலாதுன்னபி பெருவிழா!

இ.னஷா அல்லாஹ் எதிர்வரும் 22.10.2021 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியிலிருந்து 7.30 வரை ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை சார்பில் (குளோபல்) உலகளாவிய மீலாதுன்னபி பெருவிழா நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு சுன்னத் ஜமாஅத் பேரியக்கத் தலைவர் முனைவர். ஹாஃபிழ் ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி, அபூதாஹிர் ஆலிம் பாகவி (பேராசிரியர், நூருல் இஸ்லாம் அறபுக் கல்லூரி) ஹுஸைன் மக்கீ (அபுதாபி) மற்றும் ஆலிம் பெருமக்கள் உரையாற்றவுள்ளனர். முரீதகள் அஹ்பாபுகள் அவசியம் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கலீபா. முனைவர். சஹ்றாப்தீன் BE., MBA.**<br>
தலைவர். ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை குளோபல் தலைவர்<br>
– மற்றும் மீலாது விழாக்குழு

---

# ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச்சங்கத்தின் பாத்திமா நாயகி (ரலி) மாலை இணைய வழி ZOOM - விழா!

அக்டோபர் 2.10.2021 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 7.30 வரை ஏகத்துவ மெய்ஞ்ஞான தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்றது. விழாவிற்கு கவிஞர். கிளியனூர் இஸ்மத் தலைமை வகிக்க, அதிரை ஷர்புத்தீன் **Dip.MBM. MBA.(UK)** அவர்கள் நெறிப்படுத்த, இலங்கை ஹிஷாம் ஹிஜாஸ் வரவேற்புரை நிகழ்த்த, ஹாபிழ். வி.எம். முஹம்மது ஹஸன் யாஸீனிய் கிராஅத் ஓத, முனைவர். தேரிழந்தூர் தாஜுத்தீன் பாடல் இசைத்தார்.

இஸ்லாமிய இலக்கியப் பரப்பில் மாலை இலக்கியங்கள் என்ற தலைப்பில் ஆலிம்புலவர் ஆய்வுரை நிகழ்த்தியபின்,முனைவர்.ஹாஃபிழ் ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்கள் சங்கைமிகு குத்புஸ்ஸமான், ஷம்ஷூல் வுஜூத், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா நாயகம் அவர்கள் இயற்றிய பாத்திமா நாயகியார் மாலை நூலின் சிறப்புகள் குறித்து சிறப்புரை யாற்றினார். திருச்சி நைனார்முஹம்மது அன்ஸாரி **M.A., MLIS.,** நன்றியுரை நிகழ்த்தினார்.

# திருக்குறள்

**நெடுநீர் மறலி மடிதுயில் நான்கும்**
**நெடுநீரார் காமக் கலன் (605)**

சோம்பல், எதையும் தாமதமாகவே செய்தல், மறதி, தூக்கம் என்னும் நான்கும் தாம் அழிந்துவிடக் கருதும் தன்மை கொண்டவர்கள், விரும்பி ஏறும் கப்பல்களாம்.

## இம்மாதச் சிறப்பு தினங்கள்

صفر

**ஸஃபர்**

| பிறை | |
|---|---|
| 5 | ஸதக்கத்துல்லா அப்பா (ரஹ்) மறைவு |
| 10 | கமுதி முஸாபிர் வலி (ரஹ்) உரூஸ் |
| 14 | காயல் தைக்கா சாஹிபு (ரஹ்) மறைவு |
| 17 | கொடிக்கால் பாளையம் அப்துல் மஜீது ஸூஃபி (ரஹ்) உரூஸ் |
| 28 | இமாம் ஹஸன் (ரலி) ஷஹீது |

ربيع أول

**ரபீவுல் அவ்வல்**

| | |
|---|---|
| 1 | புனித மீலாது மாதம் தொடக்கம் |
| 10 | நாகூர் பாதுஷா (ரலி) ஜனனம் |
| 12 | சங்கைமிகு மீலாதுன்னபீ |
| 12 | க்வாஜா குத்புதீன் பக்தியார் காக்கீ (ரலி) மறைவு |
| 16 | நிளாமுத்தீன் அவ்லியா (ரலி) கந்தூரி |

**வாசக நேசர்கள் அனைவருக்கும்**
**புனித மீலாது வாழ்த்துகள்!**

வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா? **மறைஞானப் பேழை சந்தா அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**
**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255.**
**IFSC Code.IOBA 0002098**
**Branch- RM COLONY. DINDIGUL**

***பெயர் – முகவரி*** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்



# அமுத மொழிகள்

- ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்மீது ஸலவாத்துச் சொல்லாமல் பாங்கு சொல்வது நல்லதல்ல. ஸலவாத்துக்கூறும் முஸ்லிம்களையே அல்லாஹ் காப்பாற்றுவான்.

- கல்வியிலும் வேதத்திலும் பொய் சொல்லாதே. அப்படிப்பட்டவனைச் சமுதாயம் நாயெனவும் மதிக்காது.

- காரணங்களைக் கண்டறிந்து செயல்படும்போது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உம்மி நபியாக - எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயினும் எவ்வளவு பெரிய விஞ்ஞானியாகவும் டாக்டராகவும் திகழ்ந்திருக்கிறார்கள் என்பனவற்றை அறிந்து கொள்ளலாம். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஒவ்வொரு சொல்லையும் - செயலையும் ஆராய்ந்தால் அன்னவர்களின் உயர்வை விளங்கிக் கொள்ள வியலும்.

- எந்தத் தடை வந்தாலும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றியே வாழ வேண்டும்! அதுதான் ஈமானும் நல்வழி நடத்தலுமாகும்!!

- நாம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்மீது பேரன்பு வைத்து அவர்களது புகழ்பாடி இறைவனின் நெருக்கத்தைப் பெற வேண்டும்.

- மலேசியாவில் "இன்னல்லாஹ வமலாயிகதஹு" என ஓதினால் உடனே பெரும் சப்தமாக "ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்" என சலவாத்து ஓதுகின்றனர். பார்க்கவும் கேட்கவும் பெரும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

- இங்கே மக்கள் மனதில் அண்ணலாரின் அன்பைக் குறைத்து கந்தூரியை நிறுத்தி விட்டனர். இதனால், அதை அரைகுறை மனதோடு செய்து வந்தவர்களுக்கும். நிறுத்திவிட ஓர் அவகாசம் ஏற்பட்டு விட்டது.

ஓர் அற்ப சந்தோஷம்! பணச் செலவும் மிச்சம் தானே! இமாம்களிற் சிலர், கந்தூரி கொடுப்பது வாஜிபு என்றே கூறுகின்றனர்!

• எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் காலத்திற்குப்பின் ஞானம் குறையக் குறைய வேறு வகையான அமைப்புகள் வந்து சேர்ந்துவிட்டன. ஞானம் இருக்குமிடத்தில் வேறு ஒன்றும் இராது.

• ஞானம் குறைந்ததால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையே குறைவுபடுத்திப் பேசும் காலம் வந்து விட்டது!

• எம்பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார்கள்.

• எனவே, இயற்கையே அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கியது. ஆகாயம், காற்று, நீர் முதலியனவற்றை எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நோக்குங்கால் அவையே அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கலாயின.

• மேலும், எம்பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் யாதொன்றைக் கொண்டும் "தேவையற்ற" (ஸமத்) நிலையிலிருந்தார்கள்.

• ஒரு பொருளை உண்பதனாலோ அல்லது அருந்துவதனாலோ தாம் அவர்களுக்கு வயிறு நிரம்பும்; தாகம் தணியும் எனும் நிலைகளுக்கு அப்பாற்பட்டவர்களாகத் திகழ்ந்தார்கள்.

• இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அய்யுகும் மிஸ்லீ" (உங்களிலே யார் எம்மைப் போன்றவர்?) என வினவினார்கள் என்பதும் சிந்திக்கத்தக்கதாகும்.ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வியர்வை கஸ்தூரி மணம் போன்றது என்பது உண்மை. ஆனால், வஹ்ஹாபிகள் இதனை ஏற்றுக் கொள்ளாமல், "எங்களுடையதுபோல் தான் இருக்கும்" என்கின்றனர்.

• ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு கஸ்தூரி மணம் எப்படி வரும்? எனக் கேட்கின்றனர். அவர்களைக் கண்டவர்களா இவர்கள்? வஹ்ஹாபிகள் நாற்றமுடையோர், எனவே தங்களைப் போலவே ரசூல்

# அமுத மொழிகள்

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் இருப்பார்கள் எனக் கூறுகின்றனர்.

- ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அனாதையான சிறுபிள்ளைகளின் தலைமீது அன்போடு கருணையோடு கைவைப்பார்களாம். அன்று முழுதும் அப்பிள்ளைகள்மீது மணம் வீசிக் கொண்டே இருக்குமாம்.

- எனவே, ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நம்மைப் போன்ற மனிதரல்லர். ஆனாலும் அவர்கள் மனிதர்தான் எனினும் அவர்கள் நம்மைப் போன்ற மனிதரல்லர்.

- இரண்டு கை, இரண்டு கால், கண், மூக்கு, வாய் போன்ற உறுப்புகள் நமக்கிருப்பது போல் தான் அவர்களுக்குமிருந்தன.

- அதற்காக அவர்களை நம்மைப்போன்ற மனிதர் எனக் கூறவியலுமா? ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தத்துவார்த்தம் என்ன என்பதனை அறிய வேண்டாமா?

- கந்தூரி மீலாது விழாக்களைச் சிறப்பாகச் செய்யுங்கள். நமது ஊரில் மீலாது கந்தூரி செய்வதால் நமக்கு மட்டுமல்ல. நம் எதிரிகளுக்கும் நன்மையுண்டு. பெண்களும் வீட்டில் மவ்லூது ஷரீப் ஓத வேண்டும்.

---

**அல்லாஹுவாலும் அவனுடைய ரஸூலாலும் கூறப்பட்ட ஒன்றை நிராகரிக்கவோ மாற்றவோ பிழையெனத் தீர்மானங் கொள்ளவோ எவராலும் முடியாது. அப்படிச் செய்வோர் அல்லாஹுவுக்கும் ரஸூலுக்கும் முரண்பட்டவர்கள். கொடிய தண்டனைக்கு ஆளானவர்கள். இதில், முக்கியமாக ஸலவாத்துச் சொல்வதையும் சிலர் வேண்டாமெனத் தடுத்து நிறுத்துகின்றனர். இவர்கள் அல்லாஹுவின் வாக்குக்கு முரண் செய்கிறவர்கள். அதற்கு உண்மையான கருத்திருக்க அதனுக்கு மாற்றுக் கருத்துக் கூறி அறியாத பாமர மக்களை வேறு பாதையிற் றிருப்பி விடுகின்றனர். ஸலவாத்துச் சொல்லும் இடத்துக்குச் சிலர் சென்றாரானால் வாயை இறுக மூடிக் கொள்வர். அவ்வாறே திக்று செய்யும் ஒரு கூட்டம் திக்றை இழிவுபடுத்துகின்றது. அல்லாஹுவை திக்று செய்வதில் என்ன இழிவிருக்கிறது ? இவ்வாறு இழிவுபடுத்துகிறவர்கள் அல்லாஹுவையே இழிவுபடுத்துகிறார்கள் என்பது தான் உண்மை என்க. ஞானமுடையோர் இதை விளங்குவர்.**

# அமுத மொழிகள்

وَمَنْ يُطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيّٖنَ

وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا (سورة النسآء – ٦٩)

“எவர்கள் அல்லாஹ்வுக்கும் ரஸுலுக்கும் வழிபடுகிறார்களோ அவர்கள், நபிமார்களில் நின்றும் எவர்கள் மீது அல்லாஹ்தஆலா உபகாரம் செய்தானோ அவர்களுடனும் சன்மார்க்கர் (சத்தியவான்)களுடனும் உயிர்த் தியாகிகளுடனும் நல்லவர்களுடனும் இருப்பார்கள். அவர்கள் தோழர்களால் சுந்தரர்களாயினர்.”

அல்லாஹ் ஸுப்ஹானஹுவதஆலா, ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள் என ஏவும் போது அது எமக்கு பர்ளாகிறது. அல்லாஹ்வை திக்று செய்யுங்கள் என ஏவும் பொழுது அதுவும் எமக்கு பர்ளாகிறது. அவ்வாறிருக்க அவன் கட்டளையிட்டவைகளுக்கு மாற்றமாக ஸலவாத்துச் சொல்ல வேண்டாம். அல்லாஹ்வை திக்று செய்ய வேண்டாம் எனப் பகிரங்கமாகக் கூறிக் கொள்கிறார்கள் சிலர். எதற்கு இவ்வாறு கூறுகின்றனர் என்பதைச் சிந்தித்துப் பார்க்குமிடத்து இது ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உள்ள வெறுப்பாற்றான் என்பது புலனாகிறது. ஹஜ்ஜுக்குப் போவோர் சிலர் மதீனாவுக்குப் போவதில்லை. அவ்வாறு தற்செயலாகப் போய்ப்பட்டாலும் மஸ்ஜிதுன் நபவிய்யின் பக்கமே கால் வைக்கவும் மாட்டார்களாம்; திரும்பிப் பார்க்கவும் மாட்டார்களாம். இதனால் என்ன புலனாகிறது ? நபிகள் நாயகம் மீதுள்ள வெறுப்பே தான் இது. நபிகள் நாயகம் அவர்களையே வெறுப்பவன் எப்படிப்பட்டவன் என்பதை பொதுமக்களே உணருங்கள்.

*(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)*

---

## பூரணம் - எழில்

உருவிற் பூர ணத்தவர்
கருத்தி லேக பூரணர்
மறுவி லாத வழகினர்
மாண்பு நாத ரெம்பிரான்.

– அற்புத அகில நாதர் நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

## சுந்தர நபிகளாரின் சுந்தனப் புகழ் பாடும்

# ஸுபுஹான மவ்லிது

(நேசரின் நேசன்– **N.M.R.** ஆலிம் நூரி– திருச்சி)

அகிலம் போற்றும், நாயகர் யார் தெரியுமா? ஆலம் அர்வாஹிலே தொடங்கி, அகிலம் அழிந்துபோன பின்னும், போற்றப்படும் ஒரே நாயகர், தீர்க்கதரிசிகள், வேதங்கள், விண்ணவர்கள், மண்ணவர்கள், மதத்தவர்கள், வானகம், வையகம், இருப்பவர்கள், மறைந்தவர்கள், உயிருள்ள, உயிரற்ற– சிறுவர்கள், பெரியவர்கள், இப்படி அனைவராலும் போற்றப்படும் யுக நாயகர் நம் உயிரிலும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மட்டுமே! இறைவன் தனது ஹம்துலே முஹம்மதை ஆக்கினான், உலகில் முஹம்மது என்று உச்சரிக்காத நாவுகள் இல்லை, எதிரிகள் கூட முஹம்மது என்று செல்லமாகக் கூறுவர் ரஸூலுல்லாஹ்வைத்தானே ஏற்க மறுத்தனர். அவர்களுக்கு தெரியாமல் புகழுக்குரியவரை புகழ்ந்தனரே.

முஹம்மது என்றால் என்ன பொருள்? புகழுக்குரியவர், புகழப்படவேண்டியவர், புகழப்பட்டவர். இது மனிதர்களால் உருவாக்கப்பட்டது அல்ல. இறைவனால் உருவாக்கப்பட்டது. புகழக்கூடாது என்று கூறுபவர்கள் கூடப் புகழவேண்டும் என்பது விதி, படைத்தவனின் ஏற்பாடு. அது ஏன்? அவர்களின் பெயருக்குள்ளேயே புகழ் இருக்கிறது. இப்படி இருக்க மவ்லிது ஷரீப் ஓதக் கூடாது.. ஷிர்க்கு எனக் கூறுபவர்கள் உண்டு! மவ்லிது ஷரீப் ஓதக்கூடாது என்று திருக்குர்ஆனில் இருக்கிறதா? நபிமார்கள், ரஸூல்மார்கள், இமாம்கள் கூறியிருக்கிறார்களா? இவர்களை விட எதில் சிறந்தவர்கள் நீங்கள்? ஏதாவது ஒன்றைக் கூற முடியுமா?

ஷிர்க்கு என்றால் ஷரீஅத் எதைத் தடுத்ததோ அதுவே ஷிர்க்காகும். நாம் கூறுவதெல்லாம் ஷிர்க் என்றால் அல்லாஹ், ரஸூல் எதற்கு?

அடுத்து ஒரு செய்தி. அல்லாஹ், நபியுல்லாஹ் அவர்களை ரஹ்மத் என்று அழைக்கிறான், ரஹ்மத் என்ற வார்த்தை, மூலமான, அசலான வார்த்தையாகும் அதிலிருந்துதான் அல்லாஹ்விற்குப் பயன்படுத்தும் வார்த்தைகளான ரஹ்மான், ரஹீம் என்ற வார்த்தைகளும் அடங்கும். அல்லாஹ் தனது ஹபீபுல்லாஹ்விற்கு மூலத்தை, அசலைக் கொடுத்துள்ளான் என்றால் அதுவே அவர்கள் மீது அல்லாஹ் வைத்திருக்கும் நேசமாகும்.

இதையாராலும் பிரிக்க முடியாது என்பது உண்மை. உங்களுக்கு ரஹ்மத் வேண்டுமா? அழையுங்கள் நபியுல்லாஹ்வை! அதனால் தான் மவ்லிது ஷரீப் ஓதி அழைக்கிறோம்.

பிஸ்மில்லாவில் கூட ரஹ்மத்திற்குச் சொந்தமான ரஹ்மான், ரஹீம் இருக்கிறது இதை கூறித்தான் எதையும் ஆரம்பிக்க வேண்டும் என்பது ஷரீஅத் கூறும் விசயமாகும்.

ஒருமுறை கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் தோழர்களிடம், அருமைத் தோழர்களே! நாளை கியாமத் நாளில் மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்கும் நேரம் அல்லாஹ் என்பெயர் சொல்லி யாமுஹம்மது என்று அழைப்பான்! இதை லட்சக்கணக்கான மக்கள் கேட்டு நான்தான் முஹம்மது... நான்தான் முஹம்மது... என உலகில் முஹம்மது இப்றாஹீம், முஹம்மது இஸ்மாயீல் என்று பெயர் வைக்கப்பட்டவர்கள் கூறுவர். அப்போது இறைவன், நான் உங்களை அழைக்கவில்லை, என் ஹபீபை அல்லவா அழைத்தேன் நீங்கள் ஏன் வருகிறீர் என்று கூறுவான்.

அதுகேட்டு மக்கள் கண்ணீர் மல்க இறைவா! நாதியற்ற இந்நேரம் திக்கு திசை இல்லாத (நேரம்) இடம் எங்களைத்தான் அழைத்தாயோ என்று நாங்கள் நினைத்தோம் என்று கூறுவர். அப்பொழுது மீண்டும் அல்லாஹ் அந்த ஜனங்களைப் பார்த்து என் ஹபீப் மீது உங்களுக்கு அவ்வளவு நேசமா? என் ஹபீபின் பெயரை உங்கள் பெயருடன் இணைத்தீர்களே என்றுகேட்கும்போது, ஆம்! என்று அந்த ஜனங்கள் கூறுவர் அப்போது அந்த ஜனங்களை அல்லாஹ் அழைத்து நீங்களும் சுவனம் செல்லுங்கள் என்று கூறுவான். மக்கள் அனைவரும் சுவனம் செல்வார்கள் என்று கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நமக்கும் நம்குடும்பத்தினருக்கும் நம்பிள்ளைகள், நம் சந்ததியினர்களுக்கும் அந்த நஸீபை அல்லாஹ் தருவானாக ஆமீன்.

பார்த்தீர்களா! நம்மைக் கரை சேர்ப்பது முஹம்மத் ரஸூல் மட்டும்தான் என்பதை உணருங்கள். அவர்களின் நேசம் இல்லையென்றால் சுவனம் ஏது? அப்படி இருக்க மவ்லீது ஷரீப் ஓதக்கூடாதா? சிந்தனை செய்வோம்.

பிரபஞ்சமே அவர்களுடையது தானே. இதனால்தான் அல்லாஹ் பிரபஞ்சத்தை பஞ்சபூதங்களால் அமைத்தான். பஞ்ச பூதங்களை ஆட்சி, அதிகாரம் செய்யக்கூடிய ஆற்றலை ஆறு நபிமார்களுக்கு வழங்கினான். தன்னுடைய ஹபீபிற்கு அனைத்தையும் கொடுத்தான். இதுவே நமது உயிரிலும் மேலான கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தனிச் சிறப்பாகும்.

நபி நூஹ் (அலை) அவர்களுக்கும் நபி மூஸா (அலை) அவர்களுக்கும் நீரை அதிகாரம், வசப்படுத்த கூடிய ஆற்றலைக் கொடுத்தான் நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு நெருப்பை அதிகாரம் வசப்படுத்தகூடிய ஆற்றலைக் கொடுத்தான். நபி தாவூத் (அலை) அவர்களுக்கு மண்ணை அதிகாரம் வசப்படுத்தகூடிய தன்மையை

அளித்தான். நபி சுலைமான் (அலை) அவர்களுக்கு காற்றை அதிகாரம் செய்யக் கூடிய ஆற்றலை அளித்தான்.

நபி ஈஸா (அலை) அவர்களுக்கு ஆகாயத்தை அதிகாரம் செய்யக்கூடிய வல்லமையை அளித்தான. ஆனால்! நமது உயரிலும் மேலான நபியுல்லாஹ் அவர்களுக்கு இவை அனைத்தையும் அளித்தான். இதைப்பற்றி உண்டான நிகழ்வுகள் ஹதீஸ் ஷரீபிலே ஏராளம் உண்டு அதைப்பற்றி கூறினால் ஏடுகொள்ளாது. ஆக கண்மணி அவர்களுக்கு இவ்வளவு சிறப்புகள் இருக்க மவ்லிது ஷரீப் ஏன் ஓதக்கூடாது.

அடுத்து நமது தந்தை பாவா ஆதம் (அலை) அவர்கள், தங்களின் மகனார் ஷீது (அலை) அவர்களிடம், அருமை மகனே! நீங்கள் அல்லாஹ்வை எப்பொழுதெல்லாம் திக்ரு செய்வீர்களோ அப்போது எல்லாம் நபிமணி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து கூறுங்கள் என்றுகூற, உடன் மகனார், அருமைத் தந்தையே! ஏன் எதற்கு என்று கேட்க, நபி ஆதம் (அலை) அவர்கள் மகனே! நான் சுவனத்தில் இருக்கும் போது இறைவனின் அர்ஷில், குர்ஸில் அங்கே இருக்கும் மரங்கள், செடிகள், ஏழுவானங்கள் எதுஎது வெல்லாம் எனக்கு காட்டப்பட்டதோ அங்கே எல்லாம் முஹம்மது நபியுல்லாஹ் அவர்களின் திருநாமங்களைக் கண்டேன், ஆக! அவர்கள் மீது நீர் புகழாரம் சூட்டு என்று கூறினார்கள் என்றால்! மவ்லிது ஷரீப் அப்போதே துவங்கிவிட்டது.

ஒருமுறை நபி ஆதம் (அலை) அவர்கள், அல்லாஹ்விடம் இறைவா! நான் சுவனத்தின் தலைவாயிலின் மீது லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற திருநாமங்களைக் கண்டேன் முதல் திருநாமம் உன்னுடையது, அடுத்த திருநாமம் யாருடையது என்று கேட்க, அல்லாஹ், நபி அவர்களே! அந்த திருநாமத்திற்குச் சொந்தகாரர் என்னுடைய ஹபீப் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களைப் படைக்கவில்லை யென்றால் நான் எதையும் படைத்திருக்க மாட்டேன், ஏன் உம்மைக் கூட என்று கூற, தந்தையார் அவர்கள் இறைவா! அப்படி என்றால் உன் திருநாமத்திற்கு முன்னே அவர்கள் திருநாமம் வந்திருக்க வேண்டுமே! என்று கூற,

 படைத்த  ரப்புல் ஆலமீன், ரஹ்மதுல்லில் ஆலமீனை பற்றி கூறினான். நபியே! எவர் ஒருவர் திருக்கலிமாவை மொழிகின்றாரோ, அப்போது என் திருநாமத்தைக் கூறும்போது அவரின் இதயம் பரிசுத்தம் பெறுகிறது. அதே நிலையிலே என் ஹபீபுடைய திருநாமத்தை பரிசுத்த நிலையிலே கூறுகிறார். அதனால்தான் என் திருநாமத்தை முன்னே வைத்தேன் என்று கூறினான்.

பார்த்தீர்களா! எம் பெருமானார் எவ்வளவு புனிதமானவர்கள் என்பதனை. புனித மிஃராஜ் நிகழ்வை அல்லாஹ் குர்ஆன் ஷரீபில் குறிப்பிடும்போது சுப்ஹானல்லதீ மிகப்பரிசுத்தமாகி விட்டான் ஒருவன் என்று தன்னைக் கூறிவிட்டு புனித மிஃராஜ் பயணத்தை பற்றிக் கூறுவான். அதனால்தான்! மவ்லிது ஷரீப்பிற்கு சுப்ஹான மவ்லிது என்று மாமேதைகள் மிக பரிசுத்தமான பிறப்பு என்று பெயரிட்டனர். அதைகூட வஹ்ஹாபிகள் கிண்டலாக! கேலியாக சுப்ஹான மவ்லிதாம் என்று கூறும் போது நபியுல்லாஹ் அவர்களின் நேசம் எங்கே இருக்கிறது.

மவ்லித் ஷரீபை எழுதிய மாமேதைகளுக்கு இந்த, இந்த வார்த்தைகள் ஷிர்க்கு, இது ஷிர்க்கு இல்லை என்று தெரியாதா?

இவர்களுக்குத் தெரிந்து விட்டது, அவர்களுக்கு வழங்கப்படாத அறிவு. இவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டதா? இதை நாம் சிந்திக்க வேண்டாமா?

முடிவுக்கு வருகிறேன். மவ்லிது ஷரீபை ஓதக்கூடிய, கேட்க கூடிய வாய்ப்பு சந்தர்ப்பம் நல்ல நஸீப் உள்ளவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும் என்பது உண்மையிலும் உண்மை.

மவ்லிது ஷரீப் ஓத ஆதாரம் இருந்தால்தான் ஓதுவேன் என்றால் அப்படி நீ ஓத அவசியம் இல்லை.

நாங்கள் ஓதுவோம். எல்லா மவ்லிது ஷரீப்களையும் ஓதுவோம். எங்கள் உயிர் இருக்கும் காலமெல்லாம் ஓதுவோம். எங்களுக்குப் பின் எங்கள் சந்ததிகளும் இன்ஷா அல்லாஹ் ஓதுவார்கள். ஆதாரம் கேட்பவர்களுக்கு ஆதாரம் சுந்தர நபிகளாரின் சந்தன புகழ்பாடும் சுப்ஹான மவ்லிதின் ஆதார ஒலி இதோ!

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள், அறிவித்தார்கள் கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹஸ்ஸான் (ரலி) அவர்களுக்கு, பள்ளிவாயிலில் ஒருமேடையை அமைத்தார்கள், அதிலே அவர் ஏறி நின்று பூமான் நபியுல்லாஹ்வை புகழ்ந்து பாடுவார்கள். (நூல்: திர்மதி: 2773)

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள், அறிவித்த மற்றோர் நிகழ்வு, நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது தோழர் ஹஸ்ஸான் (ரலி) அவர்களிடம் ஹஸ்ஸானே! நீங்கள் அல்லாஹ்விற்காக எனக்காக கவிபாடும் காலமெல்லாம் பரிசுத்த ஆத்மா ஜிப்ரயீல் (அலை) அவர்கள் உங்களை பலப்படுத்திக் கொண்டே இருப்பார்கள் என கூறினார்கள். (நூல்: முஸ்லிம்: 4545)

ஹழ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒருநேரம் பள்ளிவாயிலில் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள், கவிதைபாடிக் கொண்டிருந்தார்கள். அங்கு வந்த உமர் (ரலி) அவர்கள் கடைக்கண் பார்வையால் இவர்களைக் கண்டார்கள். அந்நேரம் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் கலீபா பெருந்தகையே! உங்களை விட சிறந்தவரான நபியுல்லாஹ் அவர்கள் இருந்தபோதே இப்பள்ளிவாயிலில் கவிதைகள் நான்பாடி உள்ளேன் என கூறினார்கள். (நூல்: புகாரி– முஸ்லிம்)

கஃபு இப்னு ஜுஹைர் (ரலி) அவர்கள் எப்போதும் பள்ளிவாயிலில் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புகழ்ந்து பாடுபவர் களாகவே இருந்தார்கள். (நூல்: ஹாக்கிம்)

இப்படி ஏராளமான, ஆதாரங்கள் உண்டு. உண்மை முஃமீனுக்கு உண்மை நேசர்களுக்கு ஆதாரம் தேவையில்லை. செய்தி ஒன்றே போதும். நபியுல்லாஹ்வைப் புகழுங்கள். காலமெல்லாம் புகழுங்கள்.

## அறிஞர்கள் போற்றும் அண்ணலார்!

நபிகள் நாயகம் தோற்றுவித்த தெய்வத்தன்மை பொருந்திய புனிதமான அரசாங்கம் முற்றமுற்ற ஜனநாயகக் கொள்கையை மேற்கொண்டதாகும். மனித குலம் முழுவதும் பின்பற்றத் தக்க உயரிய கோட்பாடுகளை உடையது நபிகள் நாயகம் கொண்டுவந்த இஸ்லாம். அனைத்தையும் உள்ளடக்கியது இஸ்லாம். அகிலமே ஏற்றுக்கொள்ளக் கூடியது. அண்ணல் நபிகள் எளிய வாழ்க்கை அவருடைய மனிதத்தன்மையை தெளிவாக்கியுள்ளது.

முஹம்மது நபியின் நற்பண்புகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றிய அவருடைய கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பிரிட்டன் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு விடும் என்று எதிர்பார்க்கிறேன். –பெர்னாட்ஷா–

# தொப்பி அணியும் தோழர்கள்!

– தத்துவக் கவிஞர் பாவரசு இ. பதுருத்தீன்.

தொப்பி யணிந்தே தொழுகை புரியும்
தூய முஸ்லிம்களே! – உங்கள்
தப்பில் லாத – தோற்றம் கண்டே
சரீஅத் மகிழ்கிறதே!

சிவப்புத் தொப்பி அணிந்து கொண்டே
சேவல் கூவிடுமே!
உவப்பாய் வானும் பிறையெனுந் தொப்பி
ஒழுங்காய் மேவிடுமே!

நுரையெனும் தொப்பி அணிந்தே கரையை
நோக்கும் அலைகள்பார்!
திரையெனும் தொப்பி அணிந்தே ஜன்னல்
திகழும் அழகைப்பார்!

திறந்து மூடும் சிறிய குழாயும்
தென்படும் தொப்பியுடன்!
கறந்த பாலும் அடுப்பில் பொங்கி
காணும் தொப்பியுடன்!

நீந்தும் தண்ணீர் அணியும் தொப்பி
நிலவும் நீர்க்குமிழி– ஒளி
ஏந்தும் விளக்கின் தொப்பி தானே
காணப் படும் சிமிழி!

தங்க மோதிரத் தலைக்குத் தானே
தாங்கும் வைரக்கல்! – உலகம்
எங்கும் முஸ்லிம் எனும்அடை யாளம்
தொப்பி என்றே சொல்!

**தொடர் 43**

# மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்)

*M. சிராஜுதீன் –திருச்சி.*

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அப்பா அவர்கள் முதுமையிலும் இளமையாய் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். கண் பார்வை மங்கவில்லை. பற்கள் ஒன்று கூட விழவில்லை.

ஒருசமயம் அப்பா அவர்கள் திடீரென நோயுற்றபோது அவர்களைக் காண பெரிய தம்பி மரைக்காயர் என்ற செல்வந்தர் வந்தார். அப்பா அவர்கள் மிகவும் சோர்ந்து காணப்பட்டார்கள். மரைக்காயருக்கு இனி இவர்கள் பிழைப்பது அரிது, வயதும் வயதும் ஆகிவிட்டது என்று எண்ணிக் கொண்டு முந்திரிக் கொட்டைபோல் முந்திக் கொண்டு "இம் இனி இவர்கள் பிழைக்க மாட்டார்கள்" என்று கூறிக் கொண்டே நேரே அப்பா அவர்களிடம், "தாங்கள் இறந்துவிட்டால் தங்களை எங்கே நல்லடக்கம் செய்வது" என்று கேட்டுவிட்டார். அதற்கு அப்பா அவர்கள் எந்த பதிலும் கூறவில்லை. மௌனமாக இருந்து விட்டார்கள்.

என்ன ஆச்சரியம்! சில நாட்களில் அப்பா குணமடைந்து விட்டார்கள். பெரிய தம்பி மரைக்கார் திடீரென இறந்து விட்டார்.

இவர் இறந்த செய்தியை கேள்விப்பட்ட அப்பா அவர்கள், நான் அவர் கேட்ட கேள்விக்கு என்னுடைய விருப்பத்தைச் சொல்லி இருந்தால் அவர் அதனை நிறைவேற்றி இருப்பார். நான் இறந்துபோயிருப்பேன் அவர் பிழைத்திருப்பார் என்று கூறினார்கள்.

வலீமார்கள், குதுபுமார்கள் விஷயத்தில் இதைப் பாடமாகக் கொண்டு நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் கவனம்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அப்பா அவர்கள் பல்லாண்டு நலமாக வாழ்ந்து மார்க்க தொண்டாற்றி வந்தார்கள். ஒருசமயம் அப்பா அவர்கள் தங்கள் தோட்டத்தில் தனித்து இருந்த சமயத்தில் ஜடகண்ட யோகத்தில் இருப்பதுண்டு, அதாவது அவர்களின் உடல் உறுப்புகள், கை, கால்கள் போன்றவைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாய் பிரிந்து கிடப்பது. இக்காட்சியை ஒருசிலர் கண்டு திடுக்கிட்டுள்ளார் கள். அப்படி ஆட்கள் பார்ப்பதை அவர்கள் அறிந்து விட்டால் அவர்கள் முழு உருப்பெற்று பழைய நிலைக்கு வந்து விடுவார்களாம்.

இப்படி தவ வாழ்க்கை வாழ்ந்து வந்த ஹாபிழ், காத்திபு, ஷாயிர், ஆரிஃபு, வலீ, ஹாஜி ஆகிய சிறப்புகளுக்குரிய ஆலிம் அப்பா அவர்களுக்கு ஹிஜ்ரி 1315 ஆம் ஆண்டு துல்கஃதா மாதத்தில் திடீரென நோய் ஏற்பட்டு நிலமை மோசமாகிவிட்டது. அதனை அறிந்த அவர்களின் மூத்த மகனார் செய்யிது அப்துல் காதிர் என்னும் திருநாமம் கொண்ட "கல்வத் நாயகம்" என்று அழைக்கப்பட்டார்கள். பதினேழு ஆண்டுகளாக தனித்து வணக்கம் புரிந்து வந்த கல்வத் அறையிலிருந்து வெளியே வந்து தமது அருமைத் தந்தையாரைக் கண்டு உடல் நலம் விசாரித்தார்கள். அதன்பின் அங்கு கூடியிருந்தவர்களிடம் "அவர்கள் இப்போது இறக்கமாட்டார்கள். அதனால், அவர்களுக்குத் தயிரும் சோறும் கொடுங்கள்" என்று கூறிவிட்டு தம் அறைக்குள் புகுந்து கொண்டார்கள்.

ஒரு வருடம் சென்றது ஹிஜ்ரி 1316 ஆம் ஆண்டு ரஜபு 5 ஆம் நாள் சனிக்கிழமை நண்பகல் அவர்களின் இறுதி நேரம் வந்து விட்டதை உணர்ந்தார்கள். உடனே அவர்கள் தம் மக்களையும், உறவினர்களையும் ஆன்மீக மாணவர்களையும் அழைத்து அவர்களுக்கு பைஅத் (தீட்சை) ஸில்ஸிலா (ஞானக் கொடிவழி) ஆகியவற்றை வழங்கி, "லாஇலாஹ இல்லா அன்த சுப்ஹானக்க இன்னீ குன்து மினல்லாலி மீன்" என்ற இறை வசனத்தையும், "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரஸூலுல்லாஹ்" என்ற மூலமந்திரத்தையும் அதிகமாக ஓதி வரச் சொன்னார்கள். இதன்பின் அவர்கள் தம் கண்களை மூடினார்கள். அப்போது அவர்களின் மூத்த மகனார் கல்வத்து நாயகம் அவர்கள் நீர்மல்கும் கண்களுடன் மீண்டும் அறையை விட்டு வெளியே வந்து "அஸ்ஸலாமு அலைக்கும் யா வாலிதீ" என்று சலாம் கூறினார்கள். அப்போது அப்பா அவர்கள் கண்களைத் திறந்து, "வ அலைக்கு முஸ்ஸலாம் யா புனைய" என்று பதில் கூறினார்கள். பிறகு அவ்விருவரும் அரபியில் சில வார்த்தைகள் பேசிக் கொண்டார்கள். அதன்பின் அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அப்பா அவர்கள் தம் கண்களை நிரந்தரமாக மூடிக் கொண்டார்கள். 65 ஆண்டுகள் மார்க்கத்திற்காக ஓயாது உழைத்த அவர்களின் புனித ஆன்மா தன் 84 ஆம் வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றது.

அடுத்த நாள் அவர்களின் 'ஜனாஸா' தொழுகை அவர்களின் இரண்டாவது மகனார் ஷாஹுல் ஹமீது ஆலிம் சாஹிபு என்ற "ஜல்வத் நாயகம்" அவர்களால் தொழ வைக்கப்பட்டு அவர்களின் பொன்னுடல் அரூஸிய்யா தைக்காவில் அவர்களின் மாமனார் தைக்கா சாஹிபு வலீ அவர்களின் அடக்கவிடத்திற்கு அண்மையில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

இந்த இறைநேசச் செல்வர்களின் பரம்பரையில் பிறந்தவர்களே அஹ்மது அப்துல் காதிர் ஆலிம் ஆவார்கள். இவர்கள் ஷெய்கு நாயகம் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் தம் ஆரம்ப கல்வியைத் தம் தந்தையாரிடமும் பெரிய தந்தையாரிடமும் பயின்றார்கள். அதோடு ஹாபிழாகவும் ஆனார்கள்.

'பாக்கியத்துஸ் ஸாலிஹாத்தில்' சேர்ந்து அஃலா ஹள்ரத் அவர்களிடம் பயின்றார்கள். வேலூரில் ஓதி முடித்தபின் நேரே பொதக்குடி சென்று அல் மத்ரஸத்துல் நூரிய்யுவில் சேர்ந்து அப்துல் கறீம் ஹளரத் அவர்களுடன் அன்புத் தொடர்பு கொண்டார்கள். 19 ஆம் வயதில் தம் மாமா மகள் மரியம் ஆயிஷா உம்மாவை மணந்தார்கள்.

"எனக்குபின் காரணமுள்ள வலீயாக விளங்க இருப்பவர் தைக்கா அஹமது அப்துல் காதிர் ஆலிம் ஆவார்" என்று பல்லக்கு தம்பி அவ்லியா அவர்கள் இவர்களைப் பற்றி கூறியதற்கேற்ப இவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் ஈஸவி 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதி வைகறைத் தொழுகை தொழுது துஆ இறைஞ்சிய நிலையில் காலமானார்கள். அரூஸிய்யாதைக்காவில் தான் இவர்களின் பொன்னுடலும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவர்களின் பிள்ளைகள் தான் அஹமது முஸ்தபா ஆலிம் அவர்களும் தைக்கா ஷுஐப் ஆலிம் அவர்களும் ஆவர். *(தொடரும்)*

# அறிஞர்கள் போற்றும் அண்ணலார்!

துவேஷம் என்னும் கருமேகக் கூட்டத்தை விலக்கி விட்டு உண்மையென்னும் கதிரவன் ஒளிபரப்பும் நன்னாள் ஒன்று வரலாம். அப்போது மேல் நாட்டு ஆசிரியர்கள் 'முஹம்மது ஒரு சரித்திர நாயகர்' என்று கூறுவதோடு இப்போது நிறுத்திக் கொள்கிறார்களே அப்படியின்றி அதற்கப்பால் சென்று அவர்களுடைய வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து மனித தத்துவத்தின் வரலாறு என்ற பொன்னேடுகளில் நபிகள் நாயகம் அவர்களுக்குரிய இடத்தை அளிப்பார்கள்.

– எஸ்.எச். லீடர்–

செந்தழலைக் குளிராகவும், சினங்கொண்டு சீறிவரும் பகையைக் குணங்கொண்ட நட்பாகவும் மாற்றவல்ல மனவலிமைமிக்க மேலோர் நபிகள் நாயகம்.

– கலைஞர் கருணாநிதி–

## ஹள்ரத்

# நிஜாமுத்தீன் அவ்லியா (ரலி)

ஒருநாள் காஜா அவர்கள் அஜுதனின் தெருவொன்றில் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது டில்லியில் தம்முடன் ஓதிய ஓர் ஆலிமைச் சந்திக்க நேர்ந்தது. கிழிந்த உடையுடன் காஜா அவர்களைக் கண்டதும் அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. மௌலானா நிஜாமுத்தீன்! உமக்கு என்ன நேர்ந்துவிட்டது. ஏன் இந்த அலங்கோல நிலை! நீர் டில்லியிலோ அல்லது வேறு எந்த ஊரிலோ மக்களுக்கு மார்க்கக்கல்வியைப் போதிக்கும் பணியை மேற்கொண்டிருப்பின் நீர் உச்சமான நிலையை எய்தியிருப்பீரே, பேரும் புகழும் பெருவாழ்வும் உமக்குக் கிட்டியிருக்குமே என்று கூறிப் பெரிதும் வருந்தினார். அதற்குக் காஜா அவர்கள் ஏதோ சாக்குப் போக்குக் கூறிவிட்டு பாபா அவர்களின் தவமடத்தை அடைந்தனர்.

காஜா அவர்களைக் கண்ணுற்றதும் பாபா அவர்கள் திடுதிப்பென "நிஜாம்! உம்முடைய பழைய நண்பர் ஒருவர் உம்மைச் சந்தித்து நீர் ஏன் இங்கு உம்நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்? எங்கேனும் சென்று மார்க்கக் கல்வியைப் போதிப்பின் வளவாழ்வு எய்தப் பெறுவீரே என்று கூறின் நீர் என்ன விடையிறுப்பீர்" என்று வினவினர்.

பாபா அவர்களின் இக்கேள்வி காஜா அவர்களைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தியது. எனினும் சமாளித்துக் கொண்டு, "ஷைகு அவர்கள் எவ்வாறு விடையளிக்குமாறு பணிக்கிறீர்களோ அவ்வாறு செய்வேன்" என்று தாழ்மையுடன் பதில் கூறினர்.

அப்பொழுது பாபா அவர்கள் தம் மாணவரை அருட்கண்கொண்டு நோக்கி, இனி எவரேனும் இவ்வாறு உம்மிடம் கூறின்,

"நீர் நான் செல்லும் வழியில் செல்பவரல்லர். ஆதலின் நீர் உம் வழியே செல்லும், நீர் நலமாக வாழ்வீராக! நான் என்னவோ தாழ்ந்தவனாக இருந்துவிட்டுப் போகிறேன் என்று பதில் கூறும்" என்று சொன்னார்கள்.

அதன்பின் அவர்கள், காஜா அவர்களை நோக்கி, "நிஜாம்! அடுக்களை சென்று ஒரு மரவையில் உணவெடுத்து வைத்து அம்மரவையை உம் தலைமீது சுமந்து உம் நண்பருக்குக் கொண்டுபோய்க் கொடுத்து வாரும்" என்று பணித்தனர்.

சற்றுமுன் சென்ற காஜா தலையில் மரவையுடன் தம்மை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டதும் தோழருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. ஓடோடிச் சென்று அவரின் தலையிலிருந்த சுமையை இறக்க முற்பட்டார். அப்பொழுது காஜா அவர்கள் நடந்தவை அனைத்தையும் அவரிடம் எடுத்துரைத்த பொழுது அவருடைய புருவங்கள் மேலேறின. உம்முடைய ஷைகு உம்மை இத்துணை உச்சத்துக்கு உயர்த்தியுள்ளதை நான் அறியாது ஏதேதோ உளறிவிட்டேனே. என்னையும் அவர்களிடம் அழைத்துச் செல்லும் என்று கூறினார்.

"சரி; முதலில் அவர்கள் அனுப்பி வைத்த உணவை உண்ணும். மற்றதை யெல்லாம் பின்பு பார்த்துக்கொள்ளலாம்" என்றனர் காஜா.

அவ்வாறே அவர் உண்டு முடித்ததும் தம் ஊழியனை அழைத்து மரவையை எடுத்துக்கொள்ளுமாறு கூறினார். ஆனால் காஜா அவர்கள் குறுக்கிட்டுத் தாமே அதனைத் தம் தலையில் சுமந்து செல்லவேண்டுமென்று பிடிவாதமாகக் கூறி அவ்விதமே செய்தனர். காஜா அவர்களுடன் வந்து பாபா அவர்களைச் சந்தித்த அவர், பாபா அவர்களின் திருமுகத்தைக் கண்ட அடுத்த கணமே அவர்களின் கரம் பிடித்துத் தம்மை அவரணைத்து ஆட்கொள்ளவேண்டுமென்று வேண்டினார். பாபா அவர்களும் அவ்விதமே செய்து அவருக்கு 'பைஅத்' வழங்கினார்கள்.

இதன்பின் டில்லி திரும்பிய காஜா அவர்கள் பின்னர் சில காலம் கழித்து மூன்றாவது முறையாக ஹிஜ்ரி 664- ஆம் ஆண்டு ஜமாதில் அவ்வல் மாதம் தம்முடைய ஆன்மீக ஆசானைக் காண்பதற்காக அஜூதன் வந்தனர். மூன்று மாதங்கள் தம் ஆசானின் காலடியில் அமர்ந்து ஆன்மீகக் கல்வி பயின்ற அவர்கள் ஷஃபான் முதல் பிறை அன்று தம் ஆசானை அணுகித் தாம் பிறரின் உதவி தேவையற்றவனாக இருக்க இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டி நின்றனர். பாபா அவர்களும் அவ்விதமே செய்தனர்.

இதன்பின் சில நாட்கள் கழித்து பாபா அவர்கள் தம் ஆன்மீக மாணவரை நோக்கி, நிஜாம்! நான் உமக்கு இந்த உலக வாழ்வில் சிலவற்றையும் அளிக்குமாறு இறைவனிடம் இறைஞ்சியுள்ளேன் என்று கூறினர். அதுகேட்டு காஜா அவர்கள் திடுக்குற்றனர். அவை ஒருவனைத் தவறுப் படுகுழியில் தள்ளிவிடுமே என்று வருந்தினர். அவர்களின் உளத்துன்பத்தை அவர்களின் முகக்குறியால் விளங்கிக் கொண்ட பாபா அவர்கள், "உலக மாயைகளால் உம்மை மயக்கிவிட இயலாது. அதுபற்றி நீர் அமைதியாக இருக்கலாம்" என்று ஆறுதல் கூறினர்.

ஏற்கனவே பாபா அவர்கள் நோய்வாய்ப்பட்டு பலவீனமுற்றிருந்ததனால் இவ்வாண்டு ரமலானில் அவர்கள் நோன்பு நோற்கவில்லை. அப்பொழுது ஒருவர்

பாபா அவர்களுக்கு சில முலாம் பழங்களைக் காணிக்கை நல்கிய பொழுது அவற்றில் ஒன்றை எடுத்து நறுக்கி பாபா முன் வைத்தனர் காஜா. பாபா ஒரு துண்டை தாம் எடுத்துக் கொண்டு மற்றொரு துண்டை காஜாவிடம் கொடுத்தனர். காஜா அவர்கள் தம் ஆசான் தந்ததை உண்ணவேண்டுமென்ற ஆசை மேலீட்டால் தம் நோன்பை முறித்து உண்டு அதற்குப் பிராயச்சித்தமாக இரண்டு மாதங்கள் நோன்பு நோற்கவும் எண்ணிய பொழுது அதனை உணர்ந்து கொண்ட பாபா அவர்கள் வேண்டாம். ஷரீஅத் எனக்கு அனுமதி வழங்குகிறது. உமக்கு வழங்கவில்லை என்று கூறித்தடுத்தனர்.

இதன்பின் தம் இறுதி நெருங்கி விட்டது என்பதை உணர்ந்த பாபா அவர்கள் ரமலான் திங்கள் பதின்மூன்றாம் நாள் காஜா அவர்களை அருகழைத்து அவர்களுக்குக் கிலாஃபத் நாமா வழங்கிக் கௌரவித்தார்கள். அப்பொழுது காஜா அவர்களை ஒரு புறத்தில் மகிழ்வும் மற்றொரு புறத்தில் கவலையும் கௌவிப் பிடித்தன. பாபா அவர்கள் தம்மைத் தம்முடைய கலீபாவாகத் தேர்ந்தெடுத்திருப்பது கண்டு மகிழ்ச்சி; தம் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பினைத் தம்மால் திறம்பட, பாபா அவர்களுடையவும் அவர்களுக்கு முன் சென்ற அவர்களின் ஆன்மீக ஆசான்களுடையவும் ஆன்மாக்கள் மகிழ்ச்சியுறும் வண்ணம் நிறைவேற்ற இயலுமா என்ற ஏக்கத்தினால் ஏற்பட்ட கவலை. இவ்விரு வேறுபட்ட உணர்ச்சிகளால் உந்தப்பட்ட அவர்கள் இதோ அதனைப் படிக்கிறார்கள். நாமும் கேட்போம்.

அருளாளனும் அன்புடையோனும் ஆகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகிறேன். எல்லாப் புகழும் அவனுக்கே உரியனவாகும். தொடக்கமும் இறுதியும் அவனே. வெளித்தோற்றமும் உள்ளமையும் அவனே. அவன் எவரை உயர்த்துகின்றானோ அவனை எவராலும் தாழ்த்த இயலாது. அவன் எவரைத் தாழ்த்துகின்றானோ அவனை எவராலும் உயர்த்த இயலாது. அவன் மறைத்ததை எவராலும் வெளியாக்கவும் இயலாது. அவன் வெளியாக்கியதை எவராலும் மறைக்கவும் இயலாது. முஹம்மது நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள், கிளையார்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக!

“அல்லாஹ்வையும் அவனுடைய திருத்தூதரையும் புகழ்ந்துரைத்து, ஹதீதுக் கலையைப் பயில்வது இதயத்தைத் திறக்கிறது; இதனைப் பயில்பவர்களுக்கு (அறிவு, ஆன்மீக) வெளிச்சத்தை நல்குகிறது என்று நான் கூறுகிறேன். இல்மெ–உசூலில் சிறந்த நூல் அபூ ஷகூர் எழுதிய ‘தம்ஹீதுல் முஹ்த்ததீ’ ஆகும்.

அந்த நூலை, இந்த பொறுப்புணர்ச்சி உள்ள, பக்தி மிகு மகன் இக்காலத்து இமாம் நிஜாமுல் மில்லத் வத் தீன் முஹம்மது இப்னு அஹ்மது என்பார் அணுவணுமாக, கவனமாக, பாடம் பாடமாக, தொடக்கத்திலிருந்து இறதிவரை முழுமையாக என்னிடம் பயின்றார். அவர் இமாம்களுடையவும் அறிஞர்களுடையவும் அணிகலன் போன்றவர். தூயோர், நல்லோர் ஆகியோர் பெருமைப்படும் வண்ணம் வாழும் நல்லார். அல்லாஹ் அவரை ஆசீர்வதித்து அவனை வழிபடும் நல்லோர்களின் கூட்டத்தில் ஆக்கி வைப்பானாக! அவர் மீது தன் அன்பு, இரக்கம் அகியவற்றைச் சொரிந்தருள்வானாக!

நான் அவருக்குக் கல்வி பயிற்றுவித்து வருங்காலை அவரை நான் திறனாளராகவும் அறிவாளராகவும் சீலம்மிகுந்தவராகவும் ஒழுக்கமுடையவராகவும் கண்டேன். போதிப்பதிலும் எழுதுவதிலும் விளக்குவதிலும் அவர் தவறிழைக்காத பட்சத்தில், அவர் தம் இல்மையையும் அறிவையும் ஆழ்ந்து சிந்திப்பதிலும் கையெழுத்துப் பிரதியைத் திருத்திக் கொள்வதிலும் நடையைத் தூய்மைப்படுத்துவதிலும் செலவழிக்கும் பட்சத்தில் அவர் இந்நூலை மாணவர்களுக்குப் போதிக்க நான் அனுமதி வழங்குகின்றேன். இந்த அனுமதிப் பத்திரம் ஷைகுகளுக்கெல்லாம் ஷைகுடைய ஆணையின் மீது– அவர்களின் கௌரவத்தையும் மதிப்பையும் அல்லாஹ் காத்தருள் புரிவானாக– அல்லாஹ்வின் தாழ்மையான அடிமையாகிய டில்லியில் வாழும் இஸ்ஹாக் இப்னு அலீ இப்னு இஸ்ஹாக்கால் ரமலான் மாதம் புதன்கிழமையன்று உலகத்தின் ஷைகுகளுக்கெல்லாம் ஷைகுடைய திருமுன் வைத்து எழுதப்பட்டது.

நிஜாமுத்தீன் என்னிடமிருந்து கற்றறிந்தவற்றையும் கேட்டறிந்தவற்றையும் சேகரித்துப் பாதுகாத்து வைத்திருப்பவற்றையும் பிறருக்கு எடுத்துரைக்க நான் அனுமதி வழங்குகின்றேன். அவர் சரியான வழியைப் பின் பற்றிச் செல்ல வேண்டும். அவர்மீது அல்லாஹ்வின் ஆசி உண்டாவதாக! ஜமாஅத்தாகத் தொழுகை நடக்கும் சில பள்ளிகளில் அவர் தனிமையை நாடி ஒதுங்கியிருப்பதையும் நான் “இவ்வுலகில் ஒரு பிரயாணி போன்றோ, வழிப்போக்கர் போன்றோ வாழுங்கள். இறந்தவர்களில் ஒருவராக உங்களைக் கருதிக் கொள்ளுங்கள்” என்ற நபிமொழியேயாகும். இந்த நபிமொழியின்படி நடக்க ஒருவன் துணிச்சலுடன் முடிவுக்கு வந்து விடுவானாயின், அவன் தன் உடல் இச்சையைக் கட்டுப்படுத்தி, தன்னைப் பலவீனனாகவும், உயிரோடில்லாதவனாகவும் கருதிக் கொண்டு, உலகத்தையும் அதன் மாய்மாலங்களையும் ஒதுக்கித் தள்ளுவானாயின் அவன் தனிமையை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளான். மேலும் அவன் உலக ஆசுவாசங்களால் ஏற்படும் தீமையை அறிந்தவனாகவும் இருக்க வேண்டும். அத்தகையோனின்

நேரம் பல்வேறு வணக்கங்களால் அணி செய்யப்பட வேண்டும். அப்பொழுது அவன் தன் நஃப்ஸை உயர்ந்த வணக்கங்களிலிருந்து சாதாரண வணக்கங்களுக்கு வருவதைத் தடை செய்ய வேண்டும். இந்தப் போராட்டத்தில் அவனுக்கு களைப்பேற்படின் அவன் வணக்கங்களில் ஈடுட்டோ அல்லது சிறிது நேரம் உறங்கியோ தன் உணர்ச்சிகளை அமைதிப்படுத்த வேண்டும். சோம்பேறித் தனமாகத் தனிமையை நாடுவதை ஒருவன் தவிர்ந்து கொள்ள வேண்டும். காரணம், அது ஒருவனை பொடு போக்குள்ளவனாக ஆக்கிவிடுகிறது. அல்லாஹ் நிஜாமுத்தீன் இவ்வுலக விவகாரங்களிலும் சரி, மார்க்க விவகாரங்களிலும் சரி, என்னுடைய வாரிசாகவும் பிரதிநிதியாகவும் உள்ளார். அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது எனக்குக் கீழ்ப்படிந்து நடப்பதேயாகும். நான் நிஜாமுத்தீனைக் கௌரவிக்கிறேன். அவர் மீது நான் பெரு மதிப்பு வைத்திருக்கிறேன்.அவரை கௌரவிப்பவர் மீதும் அவரை மதிப்பவர் மீதும் அல்லாஹ் அன்பு செலுத்துவானாக! அவரை மதிக்காதவரை அல்லாஹ் அவமானமுறச் செய்வானாக! இவை பக்கீரான மஸ்வூதீன் வார்த்தைகளாகும்.

இதன்பின் பாபா அவர்கள் காஜா அவர்களை நோக்கி, “நிஜாம்! இதனை நீர் ஹான்ஸியில் மௌலானா ஜமாலுத்தீனிடமும் டில்லியில் காஜி முன்தஜபிடமும் காட்டிக்கொள்ளும்” என்று கூறினர். அப்பொழுது காஜா அவர்களின் உள்ளத்தில் இதனை பாபா அவர்கள் டில்லியில் வாழும் தம்முடைய உடன் பிறந்தாரும் மாணவருமான ஷைகு நஜீபுத்தீன் முதவக்கிலிடம் காட்டுமாறு கூறவில்லையே என்ற எண்ணம் தோன்றியது. எனினும் அதனை அவர்கள் பாபாவிடம் வெளியிடவில்லை.

ஒருநாள் பாபா அவர்கள் தம்முடைய ஆன்மீகப் பிரதிநிதியை நோக்கி “மக்கள் தங்கி ஓய்வு கொளும் நிழல்தரு பெருமரம்போல் நீர் விளங்கவீர். உம்முடைய ஆன்மா தூய நேர்வழியில் செல்லும்வண்ணம் நீர் தொழுகையையும் நோன்பையும் பற்றிப்பிடித்து ஒழுகி வருவீராக!” என்று அமுதவாய் விண்டனர்.

ஷவ்வால் மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுது விட்டு வந்ததும் பாபா அவர்கள் தம் உமிழ் நீரைக் காஜா அவர்களின்வாயில் உமிழ்ந்து திருக்குர்ஆனை மனனம் செய்யுமாறு அவர்களைப் பணித்து “இறைவன் உம்மீது இம்மை, மறுமை ஆகியவற்றின்நன்மைகளை வழங்கியுள்ளான்” என்று ஆசீர்வதித்தனர். அதன்பின் அவர்களை நோக்கி டில்லி புறப்படுமாறு கூறி, போய், ஹிந்துஸ்தானையே கைப்பற்றுவீராக! என்று வாழ்த்துரை வழங்கினார்கள்.

ஆசானின் ஆணைப்படி டில்லி புறப்பட்ட காஜா அவர்கள் வழியில் ஹான்ஸியில் தங்கி மௌலானா ஜமாலுத்தீனைச் சந்தித்து தமக்கு பாபா அவர்கள் அளித்த கிலாஃபத் நாமாவைக் காட்டினர். அதைப்பார்த்த மௌலானா "ஆபரணமானது அதன் மதிப்பை உணர்ந்த ஒருவருக்கு வழங்கப்பட்டதற்காக அண்ட கோளங்களின் அதிபதியாகிய அல்லாஹ்வுக்கு ஆயிரம், ஆயிரம் நன்றி செலுத்துகிறேன்" என்று உணர்ச்சி மீக்குற்றுப் பண்ணி சைத்தார்கள் அவர்கள்.

இதன்பின் டில்லி வந்து சேர்ந்த காஜா அவர்களின் செவியில் முதலில் போந்த செய்தி சில நாட்களுக்கு முன் ஷைகு நஜீபுத்தீன் முதவக்கில் காலமாகி விட்டார்கள் என்பதாக இருந்தது. அதுகேட்டு காஜா அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கும் வியப்பிற்கும் அளவில்லை.

இதன்பின் காஜா அவர்கள் தம் ஆசானின் ஆணைப்படி தமக்களிக்கப்பட்ட கிலாபஃபத் நாமாவை காஜி முன்தஜபிடம் காட்ட அவரும் பெரிதும் மகிழ்ந்தார்.

இரண்டு மாதங்களே கழிந்தன. முஹர்ரம் மாதம் ஐந்தாம் நாள் தம் ஆன்மீக ஆசான் அஜுதனில் காலமான செய்தியை அறிந்தபொழுது காஜா அவர்கள் ஆற்றொணாத் துக்கத்தில் ஆழ்ந்தனர். பின்னர், அஜுதன் சென்ற அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசித்துத் தம்முடைய கண்ணீரைக் காணிக்கையாக வழங்கிவிட்டு டில்லி மீண்டார்கள் அவர்கள். அப்பொழுது அவர்களின் கையில் தம் ஆசான் தமக்குத் தருமாறு கூறிச் சென்ற அன்பளிப்புப் பொருள்களான அஸாவும் தொழுகை விரிப்பும் இருந்தனவேயன்றி வேறில்லை. அந்த அஸாவையே தம் சிம்மாசனமாகவும் கொண்டு டில்லிமா நகரில் அரசர்களும் பேரரசர்களும் கண்டு அசூயையும் பொறாமையும் கொள்ளும் வண்ணம் ஆன்மீகச் செங்கோலோச்சத் துவங்கினார்கள் காஜா.

---

*சற்றே நகுக!*

உங்களுக்கு கொலஸ்ட்ரால் ஜாஸ்தியாயிடுச்சு..

மசால் வடையாவது சாப்பிடலாமா டாக்டர்!?

எண்ணை இல்லாத எந்த வடையும் சாப்பிடலாம்...

அப்ப நான் மனகீ பாத் மட்டும் தான் பார்க்க முடியும்...

ஏம்ப்பா ...!?

அது ஒன்னுதான் எண்ணையே இல்லாத வடை...

# பவிஷ்ய புராணத்தில் பயகம்பர் நபி!

அபூ நாஜிஹ்

பவிஷ்ய புராணத்தில் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பெயர் “மஹாமத்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னறிக்கைகள் எல்லாம் மிகத் தெளிவாக உள்ளன. கீழ்க் குறிப்பிட்ட ஸ்லோகங்கள் இந்த நூலின் 3–ஆம் பர்வமான ப்ரதி ஸர்கத்தின் 3 – ஆம் காண்டத்தின் 3 – ஆம் அத்தியாயத்தில் உள்ளன.

5–ஆம் ஸ்லோகம்: “ஒரு மிலேச்சரான (ஆரியரல்லாதவர்) ஆன்மீக குரு தம் சீடர் குழுவுடன் தோன்றுவார்; அவரது பெயர் மஹாமத் என்பதாகும்.

6–இலிருந்து 8 வரையிலான ஸ்லோகங்களாவன:

போஜ ராஜர் இந்தப் பாலைவன வாசியான மகா தேவருக்குக் கங்கை ஜலத்தினாலும் பஞ்சகயத்தாலும் குளிப்பிவித்து, சந்தனம் முதலானதை சமர்ப்பித்து வழிபடுவார். சிவநாமத்தை மனதிற்கொண்டு (கூறுவார்), “ஓ, பாலைவாசியே! பூதத்தைக் கொல்பவரே, மாபெரும் அற்புதங்கள் உடையவரே, (எதிரி) மிலேச்சர்களிடமிருந்து பாதுகாக்கப் பெற்றவரே, பக்தி சிரேஷ்டரே, சச்சிதானந்த (சத்தியம், உணர்ந்தறிவு, பேரின்பம்) வெளிப்பாடே! சங்கரா! என்னைத் தங்கள் அடைக்கலத்தில் எடுத்துக் கொள்வீராக!

ஸ்லோகங்கள் 15 முதல் 17 வரையானதின் பொருளாவது:

போஜ ராஜர் தூக்கி வரும் கற்சிலையைக் கண்டு அவர் (மஹாமத்)“நீர் வழிபடும் இது நான் புசித்து மிகுந்ததைத் தின்னட்டும்” என்பார். அவ்வாறு கூறி, அதை நிகழ்த்தியும் காண்பிப்பார். இதைக் கண்டும் கேட்டும் அரசர் திகைத்துப் போவார். மிலேச்ச தர்மமான மார்க்கத்தைத் தழுவுவார்.

23 முதல் 27 வரை உள்ள சுலோகங்களின் கருத்தாவது:

இரவில் இறைவனின் தூதுவர் ஆவி உருக்கொண்டு (வந்து) போஜ ராஜரிடம் கூறுவார். “அரசரே! உமது ஆரிய சமயமே எல்லா மதங்களிலும் மேலானது எனக் கூறப்பெறலாம். அவ்வாறு இருப்பினும் ஈஸ்வரனின் ஆணை கொண்டு நான் மாமிசம் உண்போரின் மார்க்கத்தை நடத்தாட்டுவேன். என்னைப் பின்பற்றும் சிலாக்கியமானவர், விருத்த

சேதனம் செய்யப்பட்டு, குடுமியின்றி, தாடிவைத்து, உரக்கப் பிரகடனப் படுத்தக்கூடிய, புரட்சிவாதியாகிய அவர் (மற்ற) எல்லா மதங்களையும் வழக்கொழியச் செய்வார். அவர் பன்றியைத் தவிர்த்து மற்ற விலங்குகளை உண்பார். (தற்போது) குஷா என்னும் புனிதச் செடி கொண்டு புனிதப்படுத்துவது போல், அவர் போர்முறை மூலம் புனிதப்படுத்துவார். இப்படியாக "முஸ்லே" கள் புனிதமழிந்த சமயங்களைப் புறக்கணிப்பார்கள். மாமிசம் புசிப்போரின் இத்தகைய மார்க்கம் என்னால் ஆரம்பிக்கப்படும்.

சுலோகம் 2:11 "அவர் விஷ்ணுயஷின் (அப்துல்லாஹ்) இல்லத்தில் சுமதியின் கர்ப்பத்தில் பிறப்பார்."

கல்கியின் தாயார் பெயர் சுமதி ஆகும். சுமதி அல்லது சோமவதி என்றால்... "அமைதியை ஏந்தியிருப்பவர்" எனப் பொருள். ரசூலுல்லாஹ் ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாயார் பெயரும் மிகச் சரியாக இதே பொருள் கொண்ட "ஆமினா" என்பதாகும்!

சுலோகம் 2:15 அவர் "மாதவ (வைசாக) மாதம். சுக்கிலபம் (வளர்பிறை) துவாதசியில் (12–ம் தேதி) பிறப்பார்.

பாரத மக்கள் போன்றே அன்றைய அறபியர்களும் (இன்று உலகமுழுவதுமுள்ள முஸ்லிம்களும்) சந்திரக் கணக்கையே கைக் கொண்டிருந்தனர். நபிகள் நாதர் ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 12–இல் பிறந்தார்கள். இந்நன்னாளை மீலாதுன்னபீ என உலக முஸ்லிம்கள் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

---

**அபூ பக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் குடும்பத்தினரின் விஷயத்தில் முஹம்மது ரஸுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ணியப் படுத்துங்கள். (ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினரைக் கண்ணியப்படுத்துவதன் மூலம் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ணியப்படுத்துங்கள்) (புஹாரி)

ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை

5

# வஹ்தத்துல் வுஜூத்

*அ. முஹம்மது சாதிக் மதுக்கூர். (கேம்ப்-துபை)*

எங்கணும் நிறைந்து, ஏகனாய் பரந்து,

நன்னெறி காட்டும் நாயகமாய் உதித்து,

காலமெல்லாம் காத்தருளும் காதிராய் விளங்கி,

அவ்னென அமைந்த அருளே!

குறைவிலா வாழ்வை நிறைவென தரும்

குணமே நம் குருவே!

உஜூதெனும் உள்ளமையாகவும் பரிபூரணக் காட்சியாகவும் விளங்கும் கருவாகிய குருவைப் பணிந்தவனாக தொடங்குகிறேன்.

**"வஹ்தத்துல் வுஜூத்"** இது அருள் பெற்று இலங்கும் உள்ளங்களினால் அனுபவித்து இன்பம் கொள்ளக்கூடியதும், குறையுள்ளம் கொண்டவருக்கு விருப்பமுடன் விமர்சிக்க கவர்ச்சியானதுமாகும்.

வஹ்தத்துல் வுஜூத் என்பது ஏக (ஒரே) உள்ளமை என்றழைக்கப்படும். ஏக உள்ளமை என்பது பரிசுத்த தௌஹீதெனும் ஏகத்துவமாகும். மக்கா வீதிகளிலும் மதீனா இல்லங்களிலும் ஞானிகளின் உள்ளங்களிலும் ஓடிய பிரபஞ்சப் பிரவாகமாகும். இதன் ஊற்றுக்கண் பரிசுத்த சம்பூரணமெனும் இறைவனாகும்.

என் ஆத்ம உறவுகளே! அறிக. **பரிசுத்தமான உயர்வுமிக்க அல்லாஹ்வாகிய ஹக்கு உள்ளமையாகும்.**

இஃது எப்படி இருந்ததோ அப்படியே முக்கால வேறுபாடின்றி எக்காலமும் குறை மிகையின்றி நிறைந்திருக்கின்றது. காணும் பொருளாகவும் காணப்படும் பொருளாகவும் காட்சியாகவும் விளங்குகின்றது.

இத்தகைய எல்லையற்று விளங்கும் பிரமாண்ட பிரபஞ்சம், அதனுடைய வெளிப்பாடாகவும் அதன் தோன்று துறையாகவும், பிரணவ சம்பூரணமாகவும், நாம பரிபூரணமாகவும் எக்காலமும் **முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அவர்களாக நித்தமும் அருளை அருளிக்கொண்டே இருக்கின்றது.

வஹ்தத்துல் வுஜுத் என்பது, கண்ணாடி முன் நின்று தன் பிம்பத்தை காணும்பொழுது, தன்னைக் காட்டும் கண்ணாடியை மறந்து தன்னுருவத்தை மட்டும் காணும் ஊனப்பார்வையைப் போலல்லாமல், மூன்றையும் ஒரே பார்வையில் காணும் ஞானப்பார்வையாகும். மொத்தத்தில் இது பகுதிகளாக காணாமல் முழுமையாகக் காணும் **ஏகக் காட்சியாகும்**

**மறையோதும் பேருண்மை:**

மேற்கண்ட பேருண்மையைப்பற்றி அவனிக்கு எடுத்துரைக்கும் அனைத்து வேதங்களும் இறைவன் எங்கே? அவன் எப்படிபட்டவன்? என்ற விபரத்தை ஒரே மாதிரியாக கூறினால்தான் ஆத்மீகம் எனப்படும் உண்மையென நிரூபணாகும். ஆனால் எதார்த்தத்தில், வேதங்களில் இறைவன் என்பவன் இவ்விடத்தில் இவ்வாறு இருக்கின்றான் என ஒரே மாதிரியாக சுட்டிக்காட்டப்படவில்லை. இதிலிருந்து இறைவன் என்பவன் ஒரு இடத்தில் சுட்டிக் காட்டப்படக்கூடியவனல்லன் என்பதில் இவ்வேதங்கள் ஒற்றுமையோடு இருக்கின்றன. மாறாக, வேதங்கள் யாவும் அவன் எங்குமுள்ளவன் என்பதை ஒருமித்து ஓதுகின்றன. ஆத்மீகத்தை காக்கின்றன.

என்றாலும், இறைவனைப் பற்றி கூறத் தகுதியான இறையே தன் திருமறையில்...

**'நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் தோற்றம் அல்லது பக்கம் இருக்கின்றது'** எனவும்

**'நீங்கள் எங்கிருந்தபோதும் அவன் உங்களுடனே'** எனவும்

**'ஆரம்பமும் முடிவும் அவனே; வெளியும் உள்ளும் அவனே. அவன் எல்லாவற்றையும் மிக அறிந்தவன்'** எனவும்

**'நீங்கள் எறிந்தபோது (அதை) நீங்கள் எறியவில்லை, எனினும் அல்லாஹ்வே எறிந்தான்'**

எனவும் தன்னைபற்றிய முழுமையான ஞானத்தை அது முன் வைக்கின்றது.

உண்மை இவ்வாறிருக்க, இறைவன் என்பவன் ஏழாவது வானத்திற்கு அப்பால் அவனுக்குரிய சிம்மாசனத்தில் கால் மேல் கால் போட்டு அமர்ந்து ஆட்சி செய்கிறானென்றும், தன் மனதிற்கு தோன்றுபடியும் விளக்கம் வைத்து வாழ்வது ஏகயிறையைக் கொச்சைப்படுத்தும் இணைவைப்பில்லையா?

இறைவன் என்ற உண்மைக்குப் புறம்பாக கற்பனையை மனதில் ஏற்படுத்தி அதை அழியாமல் நிலைத்து நிறுத்தி அதற்கு ஐவேளை வணக்கம் செலுத்துவதையே

இணையெனும் பாவமென்று கூறுகின்றது, இந்த வஹ்தத்துல் வுஜூதெனும் ஏகத்துவ கொள்கையுடைய இசுலாம்.

**வஹ்தத்துல் வுஜூத் இறக்குமதியே!**

இறைவன் என்பது ஏதோ என்ற ஆளுக்கொரு கற்பனையில், தன் மனதில் தோன்றும் எண்ணங்களையெல்லாம் உருவகம் செய்து வணங்கும் மனிதர்கள் மத்தியில் இந்த வஹ்தத்துல் வுஜூதெனும் ஏகத்துவப் பேரிடியிடித்து அதன் பேரொளி வீசாமல் இருந்ததில்லை. இவ்வொளியைக் கொண்டு ஒளி வீசும் உள்ளத்தை யாரும் பெறாமலுமில்லை. அதே சமயம் இவ்வொளியினால் வெருண்டோடும் வவ்வால்களும் இல்லாமலில்லை.

எல்லாமொன்றென்றே ஓதும் இந்த ஏகத்துவக் கொள்கையை அறிவிற்குப் பொருத்தமில்லாதது எனக்கூறுமிவர்கள் அனைத்தும் ஒன்றென்ற உண்மையை ஏற்க மறுக்கின்றனர்.

இரு கண்கள் கொண்ட அவர்கள் ஒரே பார்வையை உணரும்போது, இஃது எவ்வாறு சாத்தியம். இரு கண்களென்றால் இரு பார்வைகள் தானே ஏன் ஒன்றாகத் தெரிகிறது என்று கேட்காமல் அதை ஏற்றுக் கொள்கின்றனர்.

பலவித வாயுக்களை காற்று எனவும், நாடுகளையனைத்தையும் நிலமென்றும், ஆறு, குளம், ஏரி, கடல், மற்றும் நீர் நிலைகளை நீரென்றும், வெளிப்படும் பல்வேறு சூடுகளை நெருப்பு என்றும், பல வகையான வளி மண்டலங்களை வானம் என்று ஒரே வகையில் ஐம்பூதங்களென்று அவர்களால் நினைக்க முடிகிறது. ஒன்று எவ்வாறு பலவாகும் அல்லது பலவானது எவ்வாறு ஒன்றாகும் என்ற கேள்வி இங்கு வரவில்லை.

முனையொடிந்த அளவுகோலினால் ஏகத்துவ உண்மையை அளக்க முயலும் இவர்களிடம், தாங்கள் வணங்கும் இறைவனைப்பற்றிக் கேட்டால், தாங்கள் கூறும் இறைவனுக்கும் அவர்களின் குழுவின் மற்றவர் கூறும் இறைவனுக்கும் எந்தவித தொடர்பும் இல்லாமலிருப்பதை காணலாம். இத்தகைய போலி ஏகத்துவ வா(ந்)திகள் சத்தியம் பேசுவது அசாத்தியமே.

வஹ்தத்துல் வுஜூதை மறுப்பதாக நினைத்துக் கொண்டு (தன்னையே) எதிர்ப்பவர்கள், இச்சொல் இந்தியாவிலிருந்தும் அல்லது கிரேக்கத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டது என்கிற வாதத்தை முன்வைக்கின்றனர்.

வஹ்தத்துல் வுஜூத் எனும் சொல் அறபு மொழியிலேயே இருப்பதால் இது அறபு

நாட்டிலிருந்துதான் இறக்குமதியாகிருக்கும். மூளை கலங்கிய, காய்ந்த வரண்ட மொழியறிவில்லாத, தத்துவார்த்தத்தையே நுகராத பித்துப் பிடித்த பொறாமைக்காரக் கள்ளக் கும்பல்கள் சொல்வது போல் இம்மொழி இந்தியாவிலிருந்து இறக்குமதியாகவில்லை. இதை மனித மிருகங்கள் விளங்கிக் கொள்ளா. **வஹ்தத்துல் வுஜூதை விண்ணுலகத்திலிருந்து அல்லாஹ்வே அறபு நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ளான்.**

**எண்ணியதெல்லாம் தரும்:**

வஹ்தத்துல் வுஜூத் என்னவெல்லாம் தரும் என்ற கேள்விக்கு அதுவே பதிலாக இருக்கிறது. ஆம்! அது என்ன வேண்டுமென்றாலும் தரும், எண்ணியதெல்லாம் தரும்.

ஏனைய மார்க்கங்களை விட இசுலாத்தில் இறைவனைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வது முதலாவது கடமையாக முன் வைக்கப்படுகிறது. மற்ற ஏனைய வணக்கங்களுக்கு இந்த அறிவே மூலதாரமாக இருப்பதால் இறைவன் யார் என்பதில் தெளிவுடமை வேண்டப்படுகிறது.

இவ்வாறு இறைவனையறிந்து வணங்குவதால் ஏற்படும் நன்மைகளும் அதன் தன்மைகளும் ஏராளம். இந்த ஏகத்துவ மெய்ஞ்ஞான அறிவைப் பெற்றதனால் தொழுகை முடிந்தவுடன் இறைவனை மறக்கும் நிலையில்லாமல் கணந்தோறும் இறைநிலை மறவா உன்னத நிலையை அடையலாம்.

தனக்கென்ற தனி உள்ளமையுடன் வாழாமல் இறையுடன் இரண்டற கலந்து வாழும் வாழ்வையும் அனைத்தினதும் தத்துவார்த்தம் ஒன்றெ்ன உணர்ந்து வாழ்வதினால், ஏனைய உயிரிகளிடத்தில் பேரன்பும் பரிவும் ஏற்பட்டு, தன்னளவில் பிரபஞ்ச க்கவர்ச்சியும் மிளிர்வதை உணரமுடியும்.

மார்க்கத்தின் ஐந்து கடமைகளை கடமைக்காக செய்யாமல் இறையிலே இரண்டற கலந்து இறை காதலில் தரிசித்து பேரின்பத்தையடையலாம்.

**எவ்வாறு அடையலாம்?**

'அனைத்தும் ஒன்றென்ற' இந்த ஏகத்துவ உண்மையைத்தான் நபிமார்களெனும் அவதார புருஷர்கள் தன்னிலே ஏந்தி, இந்த பூமியில் வலம் வந்து வாசம் செய்தார்கள். அதன் பின்பு அநந்தரர்களெனும் வாரிசுகள் அவனியில் தோன்றி அருளாக விளங்குகின்றனர். விளக்குகின்றனர்.

இப்போற்றுதலுக்குரிய வஹ்தத்துல் வுஜூத் என்னும் பேரறிவை எவ்வாறு நாம் அடைவது என்ற தாகத்திற்கு நீர் பந்தராக, தாகி பிரபமாக, காலத்தின் தலைவராக,

உண்மையின் வெளிப்பாடாக, வஹ்தத்துல் வுஜூதாக வெளிப்பட்டிருக்கின்ற குரு நாதரில் தன்னை முழுவதுமாக சரண் அடைவதே இதற்கு வழியாகும்.

அதைவிடுத்து, புத்தியைக் கொண்டோ சந்தேகம் ஒருவருக்கு ஏற்பட்டு இதுதான் எனும் முடிவுக்கு வருவது கொண்டோ, சிந்தனை செய்வது கொண்டோ, தருக்க முறைகளைக் கொண்டோ, அது கொண்டு கண்டறிந்த சில ஒழுங்கு முறைகளைக் கொண்டோ, அல்லாஹ்வின் திரு நாமங்களையும் ஸிபாத்தகளான வருணனைகளையும் மனனஞ்செய்து அவற்றின் கருத்துகளை சரியாகவும் விளக்கமாகவும் அறிவது கொண்டோ, நாடோறும் பாராயணஞ் செய்வது கொண்டோ அதன் உள்ளமையை எவராலும் அறிதல் இயலாததாகும்.

**குத்புகள் எனும் மகத்துவமிக்க இந்த பிரபஞ்ச ரஸவாதிகள் தங்களிடம் தஞ்சம் அடைந்த உள்ளங்களில், பரிபூரண பிரபஞ்ச சத்தை நித்தியமாக்கு பவர்களாக விளங்குகிறார்கள். இறந்து மடிந்து போன இதயங்களை உயிர்ப்பிக்கும் முஹிய்யுத்தீனாக உதயம் கொண்டுள்ளார்கள்.**

இறைவனைப்பற்றிய அறிவை அறிவிக்க இறைவனே பொருத்தமானவன் அவ்வாறே அவனின் இரண்டற கலந்து 'மள்ஹரில் அதம்மு' வான மகான்களே இறைவனைப் பற்றிக்கூற தகுதியானவர்கள்.

இவ்வாறு இலங்கும் குருவானவர்கள், வேறு இல்லை அவர்களே கருவானவர்கள், நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும் கருவை (நாம் முதலில்) சந்திக்கும் சந்திப்பு அது வெறும் சந்திப்பல்ல லிகா வெனும் தெய்வ தரிசனமே. ஏனெனில் அவர்களே தன்ஸீஹ் மஹ்லெனும் பூரணத்தவர்கள்.

**முடிவில்லா முடிவாக....**

7. காகிதம் தன்மேல் விழும் மையை நான் உறிஞ்சுகிறேன் எனவும், 6. பேனா தான்தான் காகிதத்தில் எழுதுகிறோம் எனவும், 5. கைதான் இதை நான் எழுதுகிறேன் எனவும், 4. உடம்புதான் இதை எழுதுகிறது எனவும், 3. மூளைதான் இதை இயக்குகிறது எனவும், 2. இதையெல்லாம் சேர்த்த மனிதன்தான் எழுதுகிறான் என தனித்தனியாக உஜூது எடுத்த நிலையிலும், 1. அது எதார்த்தத்தில் ஒரே உள்ளமையாக தன்னில் தானாய் இயங்குகின்ற (அந்த மனிதனுக்கு சக்தி கொடுகின்ற) இறைவன்தான் எழுதுகிறான் என்ற உண்மை ஏகாந்தமாக ஒவ்வொரு நொடியிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த மேற்கண்ட நிகழ்வில் ஒவ்வொன்றும் தனித்தனி வுஜூதாகத் தெரிந்தாலும் இங்கு இறைவனே அனைத்திற்கும் மூலகாரணமாக விளங்குவதுவெள்ளிடைமலை.

இருந்தபோதிலும் மனித மனம் மறுப்பது விசித்திரமே. எவ்வாறாயினும், அவன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் பூரணத்தில் அவனும் ஓர் அங்கமாக இருந்து வஹ்தத்துல் வுஜூதை நிரூபித்துக் கொண்டேயிருக்கின்றான் என்பதுதான் உண்மை.

இந்த வஹ்தத்துல் வுஜூதெனும் ஏக ஏகாந்த நிலையை நாம் அனைவருமெய்தி யாதும் ஊரே யாவருங்கேளிர் எனும் ஒற்றுமையையும் பெற்று , எல்லாம் ஒன்றே எனும் ஒருமைத்துவமும், வேற்றுமையற்ற மனிதநேயமும் என்றென்றும் எங்கணும் மிளிர்க. ஞான மார்க்கம் எங்கணும் பரவ மானிடவினம் ஒன்றென ஞாலமெல்லாம் பறை சாற்றி சங்கநாதம் பரப்புவோம். ஞாலமெல்லாம், ஞான ஒளி பரவி ஈன வேற்றுமைகளும் பகையும் பொறாமையும் பொய்யும் வேரறுத்துப் போகத் துணை புரிவோம்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பொருட்டாலும் அன்னவர்களின் பிரதிபிம்பமாக இலங்கும் நமது ஆருயிர் ஷைகு நாயகமவர்களின் பொருட்டாலும் இந்த தகைமையை அல்லாஹுதஆலா நமக்கும் உங்களுக்கும் தந்தருள்வானாக. ஆமீன்.

ஸல்லல்லாஹு அலா மள்ஹரில் அதம், வஸல்லம் அலைஹி வா ஆலிஹி வஸஹ்பிஹி.

---

## அறிஞர்கள் போற்றும் அண்ணலார்!

அரேபியப் பாலைப் பிரதேசத்தில் முஹம்மது நபி (ஸல்) அவதரித்தது அரேபிய நாட்டிற்கும், இதர எல்லா நாடுகளுக்கும் அனுகூலமாகவே நிலவியது. இப்பெரியாரது வாழ்க்கையில் உலகுக்குப் பொதுவாகக் கிடைத்த நன்மைக்காக அரேபியா மட்டுமல்ல, அகில உலகமே நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

– அறிஞர் அண்ணா

முஹம்மது நபியைப் பற்றி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் நான் அவரை ஒரு மனிதர் என்றும், மனிதரைப் போலவே தாயும் தகப்பனும் கூடி கருத்தரித்து பிறந்தவர் என்றும் கருதித்தான் அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அனேகத்தை நான் புகழ்கிறேன். அதற்காகவே அவரையும் நான் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப் படுபவைகளே அந்த மார்க்கத்திற்கு ஒரு பெருமை என்றும் நினைக்கிறேன். இன இழிவு நீங்க இஸ்லாமே நன் மருந்து.

– தந்தை பெரியார்

# முத்தமிழ் ஞானி!

*பாலை வனம் நூல் வெளியீட்டு விழாவில்*

**இலங்கையில் ஞானம் என்ற சஞ்சிகையை நாம் 21 வருடங்களாக வெளியிட்டு வரும் ஞான சேகரன் அவர்கள் ஆற்றிய உரை.**

ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இணையவழி இடம் பெறும் முத்தமிழ் ஞானி ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்களின் பாலை வனம் நூலிற்கு தலைமை தாங்கும் சங்கைமிகு அஸ்ஸெய்யித் மஸ்ஊத் மௌலானா அவர்களே. மதிப்பிற்குரிய நூல் ஆசிரியர் அவர்களே. அறிமுக உரை நிகழத்திய ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் ஆலிம் புலவர் அவர்களே. வரவேற்புரை நிகழ்த்திய மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் செயலர் கவிஞர் கிளியனூர் இஸ்மத் அவர்களே. மற்றும் இந்த நிகழ்வில் கருத்துரை வளங்கிய ஏனைய பேரறிஞர்களே. உலகெங்கும் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டிருக்கும் தமிழ் ஆர்வலர்களே. அஸ்ஸலாமு அலைக்கும். வணக்கம்.

ஐங்குறுநூறு வரிசையில் பாலை வனம் என்ற இந்நூலில் ஆசிரியர் யாத்த நூல்களின் விபரம் முன் பக்கத்தில் இிருக்கிறது. அதிலே ஆசிரியரின் 29 நூல்களின் விபரம் தரப்பட்டுள்ளன. அந்த நூல்களில் சிலவற்றை நான் வாசித்திருக்கிறேன். அவற்றுள் வாப்பா நாயகத்தின் புலமைக்குச் சான்றாக உள்ள ஒரு நூல் எனக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்தியது, அந்த நூலைப்பற்றி நான் இங்கு விதந்து குறிப்பிட விரும்புகிறேன். வாப்பா நாயகம் அவர்கள் "மகாரனந்தலங்காரர மாலை என்னும் பெயரில் சித்திரக் கவியாத்திருக்கிறார்கள்.

இந்நூல் வாப்பா நாயகம் அவர்கள் தமிழில் கொண்டுள்ள தன்னிகரில்லாப் புலமைக்குச் சான்றாகும். இந்த நூல் பற்றி எனக்கு முன்னர் கருத்துரை வழங்கியவர்கள் சிலரும் விதந்து

குறிப்பிட்டிருக்கிறார்கள். சித்திரக் கவிகள் புனைவது ஒரு புலமைசார் மொழிப்பிரயோகத்தின் வெளிப்பாடு. செய்யுளும் சித்திரமும் அவற்றில் இணைந்திருக்கும். சொற்களும் எழுத்துகளும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் வரும் வகையில் செய்யுள் யாப்பதும் அச்செய்யுளை ஒரு குறிப்பிட்ட சித்திர வடிவத்திலே தருவதும் அடிப்படையாகும். படைப்பிலக்கியம் தரும் உணர்வு இலக்கிய அனுபவத்தை சித்திரக்கவிகள் தருவதில்லை, ஆனால், மொழி மூலம் ஒரு புதிரைக் கட்டமைப்பதும் அதை அவிழ்ப்பதும் கிடைக்கும் இன்பம் இதன் வினைப்பயனாகும். ஆழ்ந்த புலமையும் அகன்ற யாப்பறிவும் இருந்தாலன்றி சித்திரக் கவிதைகள் எழுதுவது எல்லாராலும் முடியாத காரியமென தமிழறிஞர்கள கூறுவார்கள்.

இன்றைய கால கட்டத்தில் வாப்பா நாயகத்தைத் தவிர சித்திரக் கவிதை எழுதிய வேறொரு புலமையாளரைக் காணமுடியாதுள்ளது. இத்தகைய பெரும் புலமைத்துவம் கொண்ட வாப்பா நாயகம் அவர்களாலேயே ஐங்குறுநூறுவரிசையில் பாலை வனம் என்ற இந்த நூலும் எழுதப்பட்டுள்ளது. இலங்கையில் ஞானம் என்ற சஞ்சிகையை நாம் 21 வருடங்களாக வெளியிட்டு வருகிறோம். அந்த சஞ்சிகையில் கடந்த பெப்ரவரி 2021 இதழில் இன்றைய விழாவின் நாயகர் முத்தமிழ் ஞானி ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்களைப் பற்றியும் அவரது ஆன்மீகப் பணி, மற்றும் தமிழ்ப் பணி பற்றியும் ஒரு விரிவான கட்டுரையை வெளியிட்டிருந்தோம். அந்தக் கட்டுரையை இளைஞர் "இஸாம் "இஜாஸ் எழுதியிருந்தார். அக்கட்டுரை முத்தமிழ் ஞானி ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்களது சிறப்பு, கல்வி, ஆசிரியப்பணி, கல்விப்பணி, சமயப்பணி, எழுத்துப் பணி அவற்றையெல்லாம் விரிவாக எழுதப்பட்டுள்ளது. முத்தமிழ் ஞானி ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்களைப் பற்றி எனக்கு முன்பு பேசிய பலரும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆனாலும் எனது கருத்துரையின் முழுமை கருதி நானும் அவரைப்பற்றிய பெருமைகளை கூற விழைகிறேன்.

மௌலானா அவர்கள் இளம் வயதிலேயே திருக் குர்ஆனை

முழுமையாக ஓதி முடித்து விட்டார்கள். திருக்குர்ஆன் ஓதத் தொடங்கியது முதல் மற்ற எல்லா அறபுக் கலைகளையும் மெய்ஞ்ஞானக் கலைகளையும் தமது அருமைத் தந்தையாரிடமே முறைப்படி கற்றுத் தேர்ந்தார்கள். தமது தந்தையார் முன்னெடுத்துச் சென்ற மெய்ஞ்ஞான வழியை அவர்களின் மறைவுக்குப்பின்னர் அவர்களின் ஞானப் பாட்டையின் ஆன்மீகத் தலைவராகவும் பொறுப்பேற்று ஞான விளக்கத்தோடு மெய்ஞ்ஞான அறிவைத்தேடும் மக்களுக்கு மெய்ஞ்ஞான அறிவுடன் கூடிய மானுடப் பண்பையும் போதிக்கும் சன்மார்க்க மேதையாகவும் திகழ்கிறார்கள். மெய்ஞ்ஞான நெறிகளை இஸ்லாமியத் தத்துவத்துடன் கலந்து தமது கலையுணர்வையும் இலக்கியத்தையும் வளப்படுத்தி வருகிறார்கள். நபிகள் நாயகத்தின் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு மெய்ஞ் ஞானத்தைப் போதிக்கும் முகமாக ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை என்ற ஓர் ஆன்மீக அமைப்பை நிறுவி அதனூடாக மத்திய ஆசியா, தென்கிழக்காசியா மற்றும் வளைகுடா நாடுகளில் வாழும் எண்ணற்ற மக்களுக்கு நல்லொழுக்கத்துடன் கூடிய பண்பும் மரியாதையும் போதித்து மிகச் சிறப்பான மனித சமுதாயத்தை உருவாக்கி வருகிறார்கள். ஓர் அறபுக்கல்லூரியை திருச்சியில் நிறுவியுள்ளார்கள். ஞானத்தைக் கருப்பொருளாகக் கொண்டு மறைஞானப் பேழை என்னும் மாத இதழை திருச்சியில் ஆரம்பித்து கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள்.

மௌலானா அவர்கள் தமிழ் வித்துவான்களும் திகைக்குமளவு தமிழாற்றலை வளர்த்துக் கொண்டதும், தமிழில் அத்தனைப் பா வகையிலும் அதாவது, சித்திரக்கவி உட்பட அனைத்துப் பா வகையிலும் இலக்கணப் பிழையின்றி மரபுக் கவிதைகள் யாப்பதும், இலக்கண விதிகளுக்கமைய புதுப் பாக்களை இயற்றி வருவதும் மொழி வல்லமைக்கும் தனித்துவத்திற்கும் எடுத்துக்காட்டாகும். மௌலானா அவர்களின் இலக்கியங்களை நோக்குமிடத்து அவைகள் அனைத்துமே இன,மத வேறுபாடுகளைக் களைந்து மனித குலத்தின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் வழிகாட்டி சமூக இன நல்லுறவை வலுப்படுத்தி

வேற்றுமையை நீக்கி மானுட இனத்தை இலக்கியத்தின் மூலம் செம்மைப்படுத்தி வழிக்காட்டுவதாக அமைகிறது. மானுட வாழ்க்கை, ஆத்மீகம், பண்பாடு, பொருளாதாரம், வேளாண்மை, பழக்கவழக்கம், மெய்ஞ்ஞானம், அரசியல் மனித வாழ்வோடு தொடர்புடைய இன்னும் பல வாழ்வியல் நெறிகளைப் பற்றி மௌலானா அவர்கள் தமது நூல்களிலும் உபதேசங்களிலும் தெளிவாக விளக்கி நேரிய இலட்சியத்தை நோக்கி மக்களை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் ஒரு புலவர் மட்டுமல்ல தமிழில் இஸ்லாமிய ஞானம் பாடிய ஆத்மிக சித்தர் வரிசையில் வைத்து நோக்க வேண்டிய மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சித்தர் என்று கூறினால் அது மிகையாகாது. சங்ககாலத் தமிழ் நடையில் இன்பத் தமிழை இவர்கள் போற்றிப்பாடும் விதம் சங்க காலப் புலவர் தற்காலத்தில் உளரோ என்று வியந்து பார்க்கத்தோன்றும். தமிழ் உலகம் பயன்பெறும் பொருட்டு இஸ்லாமிய சன்மார்க்க நூல்கள், இஸ்லாமிய இலக்கிய நூல்கள், தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள், உரைநடை மொழிபெயர்ப்பு நூல்கள் எனப் பல துறைகளில் ஆக்கங்களைப் படைத்து வருகிறார்கள். இன்று இங்கே வெளியிடப்பட்ட ஐங்குறுநூறில் இருந்து பாலைப் பாடல்களுக்கு பாலை வனம் என்னும் பெயரில் உரை எழுதியிருக்கிறார்கள். இந்நூலில் பாடல்களுக்கு அதன் இலக்கணத்தை முதல் எழுதி பின்னர் அறிஞர்கள் படிப்பதற்கும், முற்காலத் தமிழ் மொழி எவ்வாறு இருந்தது என்பதை அறிந்து கொள்ளவும் அச்சொற்களை இன்று மக்கள் உபயோகிப்பதற்கும் அதற்குப் பல்லுடைக்கும் மொழிகள் என்ற பழிச்சொல் நீங்கவே இவ்வாறு நூலை எழுதினோம் என்று ஆசிரியர் தன்னுடைய நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

அவரது நோக்கம் சிறப்பாகவே இந்த நூலில் நிறைவேறியிருப்பதைக் காண முடிகிறது. 84 வயதிலும் மனித குல மேம்பாட்டிற்கான பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் முத்தமிழ் ஞானி ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

9 சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின்

# 85-ஆம் உதயநாள் விழா

## காணொளிக் கூடல் உரைகள்!

*உரைகள் தொகுத்தவர்: அன்ஸாரி -இப்னு கிப்லா ஹள்ரத் - திருச்சி.*

**ஸவூதி அரேபியா ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை ஆத்தும சகோதரர் பக்ருத்தீன் அலி அஹமது அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**

உலகளாவிய அளவில் இணைந்திருக்கும் ஆத்தும சகோதரர்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹூ.

நமது ஆருயிர் ஷைகு நாயகமவர்களின் மீலாது விழாவை உலகளாவிய அளவில் ஒருங்கிணைத்து, மிகவும் சீரும் சிறப்புமாக, அனைத்து நிர்வாகிகளுக்கும் முதற்கண் எனது நன்றியையும் சந்தோஷத்தையும் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். அல்ஹம்து லில்லாஹ்.

### மகிழ்ச்சியான தருணம்

நமக்கெல்லாம் தெரியும், கடந்த இரண்டு – மூன்று வருடங்களாக, இத்திருநாளை நம்மால் நாம் நினைத்தபடி பெரிய அளவில் கொண்டாட முடியவில்லை. நமது ஷைகு நாயகமவர்களின் கட்டளைப்படி நாம் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நமது இல்லத்திலேயே கொண்டாடி வருகின்றோம். இந்த கொரோனா காலத்திலும் அதுபோன்ற நிலைமை வந்துவிடுமோ என்று ஏக்கத்தில் இருந்த என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் சந்தோஷமான செய்தியாக, ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் குளோபல் தலைவர் அவர்களும் நிர்வாகத்தினரும் ஒருங்கிணைந்து இந்த ஜூம் செயலி மூலம் உலகின் பல்வேறு நாட்டிலிருந்தும் அனைத்து முரீதுகளும் கலந்து கொண்டு மிகவும் விமரிசையாகக் கொண்டாடும் வண்ணம், இந்தப் பெருநாளை, இந்தத் திருநாளை, இந்த மீலாது விழாவைக் கொண்டாட வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தேவையும் துஆவும்

நமது மிகப்பெரிய சந்தோஷமும் தேவையும் என்னவாக இருக்க முடியும்? நமது ஆருயிர் ஷைகு நாயகமவர்கள், பரிபூரண நலம் பெற்று, முன்புபோல

அனைத்து நாடுகளுக்கும், அனைத்து இல்லங்களுக்கும் விஜயம் தந்தருள வேண்டும். நம்மைப் போன்று நமது சந்ததிகளுக்கும் இந்தப் பாக்கியம் கிடைக்கும் வண்ணம், நமது ஆருயிர் ஷைகு நாயகமவர்கள் நீண்ட நெடிய நல்லாயுள் பெற்று நம்மோடு வாழ்ந்து அருள் புரிய வேண்டும் என்று வேண்டியவனாக எனது சிற்றுரையை நிறைவு செய்கின்றேன். *(உரைகள் உலா வரும்)*

---

*வரலாற்றில் ஓர் ஏடு!*

# யா முஹம்மதா!

அ பூ பக்ர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம்.

முஸைலமா என்ற ஒரு பொய்யன் – பித்தலாட்டக்காரன் இப்போது நபி நான்தான் என மக்களை ஏமாற்றிச் சுமார் ஒண்ணரை லட்சம் பேர்களைச் சேர்த்துக் கொண்டு இஸ்லாமிய ஆட்சியை அழிக்க வந்தான். ஹள்ரத் காலித் இப்னு வலீத் அவர்களின் தலைமையில் உக்கிரமான போர் நடந்தது. பல்லாயிரக்கணக்கான ஸஹாபாக்கள் – குறிப்பாக திருக்குர்ஆனை மனனஞ் செய்திருந்த ஹாபிழ்கள் ஷஹீதாகி விட்டார்கள். யுத்தமும் தோற்றுப்போகும் நிலைக்கு வந்துவிட்டது. உடனே தளபதி காலித் (ரலி) அவர்கள், யா முஹம்மதா! எனும் யுத்த கோஷத்தைக் கிளப்பி அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அன்போடு அழைக்கும்படி ஆணையிட்டார்கள். யுத்தம் வென்றது; முஸைலமா கொல்லப்பட்டான்.

இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் கர்பலாவில் ஷஹீதாக்கப்பட்ட பின்னர், புனிதம் நிறைந்த அவர்களின் குடும்பத்தினர் டமாஸ்கஸ் நகருக்கு இழுத்துச் செல்லப்பட்டு கொடுங்கோலன் யஜீதுடைய அரண்மனையில் திரைமறைவில் அடைத்து வைக்கப்பட்டனர். சற்று நேரத்திற்குப்பின் யஜீது என்பான் அங்குவந்து அந்தப் புனித மாதர்களைத் தனக்கு முன்னாலே கொண்டு வரும்படி உத்தரவிட்டான், பெருமானாரின் பேத்தியாகிய ஸய்யிதா ஜைனப் (ரலி) அவர்கள் யஜீதுக்குப் பயம் வரும்படியான ஒருபாடல் இயற்றியதோடு பெருமானாரிடம் அப்போது முறைப்பாடும் செய்து யா முஹம்மதா! எனக் கூக்குரல் இட்டார்கள். உடனே யஜீது அதிர்ச்சியடைந்து பரிசுத்தத் தாய்மார்களைப் பாதுகாவலோடு மதீனாவுக்கு அனுப்பி வைத்தான்.

---

**நமக்குப் பெருநாட்கள் ஈதுல் அழ்ஹா, ஈதுல்ஃபித்ர் இரண்டு மட்டுமல்ல; பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த ரபீவுல் அவ்வல் பிறை 12 மூன்றாம் பெருநாளாகும்.**

– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

# நான் அல்லாஹ்வின் ஜோதி....
# அனைத்தும் எனது ஜோதி....!

ஒளியானது, எல்லாச் சிருஷ்டிகளும் அதனால் ஜீவன் கொண்டு நிற்கிற ஆத்ம அம்சமாகும். எந்த வஸ்தும் ஓர் உருவத்தைக் கொண்டேயொழிய இல்லை. எந்த உருவமும் தைலம் சம்பத்தப்பட்ட நிறங்களிலிருந்து ஒரு நிறத்தைக் கொண்டல்லாது இல்லை. நிறமும் உருவமும் ஒன்றையொன்று பிரியாது. உருவம் நிறத்தைக் கொண்டல்லாது காணப்படாது. நிறமோ, தத்துவ, பூத, பௌதீக ஆதாரங்கள் விவரிக்கின்றன போன்று, ஆத்மார்த்த ஜீவ அம்சமாகிய ஒளியினின்று மாயிருக்கும். என்றாலும், இஃதை அறிவின் பட்டணமாகிய முஹம்மதிய சந்நிதானமானது, இந்த அறிவுப் புட்பங்களின் மொட்டுக்கள் திறக்கிறதற்கு முன்பே, பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு இதை விவரித்து அந்த விவரத்தை மிக அழகாகக் கூறி **"நானோ அல்லாஹ்வின் ஒளியினின்று மாயிருக்கிறேன். எல்லா வஸ்துக்களும் எனது ஒளியினின்று மாயிருக்கிறன"**. "இதனால் வஸ்துக்களுடைய உயிர்களின் அம்சம் அது வென்றும், அது அல்லாஹ்வின் ஜீவ அம்சமான ஒளியினின்றும் என்றும் அந்த முஹம்மதிய சந்நிதானம் கூறுகிறது.

இந்த ஹதீது தொடர் வாக்கியத்தின் இரு பகுதிகளிலுமுள்ள "நின்றும்" என்ற சொல்லானது அதிகமானது என்று கூறுகிற சத்திய அறிஞர்களும் உளர். அப்படியானால் அந்தத் தொடர் வாக்கியம் "நான் அல்லாஹ்வின் ஜோதி. வஸ்துக்களடங்கலும் எனது ஜோதி" என்றாகும். அல்லாஹ்வானவன் வானங்களுடையவும் பூமியுடையவும் ஜோதியாயிருக்கிறான் என்று ஹக்கு கூறுகிறது. முடிவாகக் கூறுமிடத்து அல்லாஹ்வானவன் ஒளியாகும். சம்பூரண தோன்று துறையாகிய முஹம்மதிய சந்நிதானமும் ஒளியாகும். மற்ற வஸ்துக்களும் ஒளியாகும். எனவே அடங்களும் ஹக்கு அதுகொண்டு பிரிதிபிம்பிக்கும் ஒளியாகும். (எனவே, ஒளியானது சர்வத்திலும் சம்பந்தப்படும் ஜீவ சக்தியாகும். பல நிறம், தரம் கொண்டும் அது பிரதிபிம்பக்கும்.) ஆதலால் ஒளியைக் கொண்டு மாத்திரம் மருளாதே. ஒளிவஸ்துக்களில் ஒன்று. இன்னும் ஹக்கின் வழியில் நடக்கிறவன் அதில் மருட்சி கொண்டு தட்டழிகிற திரையுமாகும். ஆதலால் உனது ஆசையினாலும் இச்சையினாலும் ஒளித்திரைகளைக் கரித்துவிடு. அந்த ஒளியின் சமுத்திரங்களைத் தாண்டிவிடு. நீ அல்லாஹ்வில் முற்றுமழிந்து நான், நீ, அவன், இவன் என்றில்லாது அவனிலே நீ தரிபடுகிற அல்லாஹ்வைக் கொண்டொழிய நீ பொருந்தாதே. ஒன்றுக் கொன்று எதுகையாகும் பெயர்களைவிட்டு நீ பரிசுத்தமாகு. சம்பூரண நேர்மைக்காக அக்ஷரமும் சப்தமுமின்றி நீ ஞாபகப்படுத்தப்படுகிறதற்காக, மிகப் பெரிய வெற்றிகொண்டு நீ ஜயம்பெறுகிறதற்காக.

***(கலிமா விருட்சக் கனிந்த கனி நூலில் குத்புல் ஃபரீத். ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி)***

# அன்னை ஆயிஷா (ரலி)

நபிபெருமானாரின் பிராட்டியார்களுள் மிகவும் இளமையான வயதுடையவர்கள் ஆயிஷா நாயகியேயாவார்கள். ஹள்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும், உம்மு ரூமான் பின்து உமைர் இப்னு ஆமிர் என்ற மாதரசிக்கும் பிறந்தவர்கள் ஆயிஷா (ரலி). இவர்கள் தமது சகோதரியின் புதல்வர் அப்துல்லா(ஹ்)வை வளர்த்து வந்ததால் இவர்களை உம்மு அப்துல்லாஹ் என்றும் அழைப்பதுண்டு. இவர்களை நபிபெருமானாருக்கு மண முடிப்பது பற்றி ஹஜ்ரத் அபூபக்கருக்குச் சிறிது யோசனையாகி விட்டது. ஏனெனில், தாமும் நபிபெருமானாரும் 'சன்மார்க்க சகோதரர்கள்' ஆக இருக்கும் நிலையில் அது கூடுமா என்று எண்ணலானார்கள். ஆனால், சொந்த சகோதரன் புத்திரியைத் தான் மணக்கக்கூடாது. இது பற்றி எந்தத் தடையுமில்லை என்று நபிபெருமானார் தெரிவித்தார்கள் இதன்பின் திருமணம் நடைபெற்றது.

ஏற்கனவே, ஆயிஷாவை ஜுபைர் இப்னு முத்இம் என்பவருக்கு மணமுடிக்கப் பேசியிருந்தனர். அக்கால அரபு நாட்டில், தங்கள் குழந்தைகள் பாலப் பருவத்தினராக இருக்கும்போது, அவர்களில் யார் யாரை யார் யாருக்குக் கொடுப்பது என்று நிச்சயம் செய்து கொள்ளும் வழக்கமிருந்தது. அவ்விதமே இந்த நிச்சயமும் உண்டாகியிருந்தது. ஆனால், அது முறிக்கப்பட்டுப் பின்னர் நபி பெருமானாருக்கும் ஆயிஷாவுக்கும் மிகவும் எளிய முறையில் திருமணம் நடைபெற்றது. விருந்தினருக்கு ஒரு கிண்ணம் பாலும், கொஞ்சம் பேரீத்தம் பழமும் மட்டும் கொடுக்கப்பட்டன.

ஆயிஷா நாயகிக்குத் திருமணமானபோது அவர்கள் வயது என்ன என்பது பற்றி ஒரு பெரிய தப்பபிப்பிராயம் நிலவிவருகிறது. அப்போது (நபிப்பட்டம் கிடைத்த பத்தாம் ஆண்டில்) அவர்களுக்கு ஆறு வயதுதான் என்று சிலர் எழுதியுள்ளனர். மேலும் இதிலிருந்து ஐந்து வருஷத்துக்குப் பின்னர் ஹிஜ்ரி இரண்டில்) ஆயிஷா நாயகி தமது கணவர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்றும் சொல்கின்றனர். ஏனெனில், நபி பெருமானாரும், ஹள்ரத் அபூபக்கரும் தாங்கள் இருவர் மட்டுமே முதலில் மக்காவை விட்டு மதீனாவுக்கு 'ஹிஜ்ரத்' செய்தனர். பின்னர் அங்குள்ள நிலையைச் சீர்செய்து விட்டுத் தத்தம் குடும்பத்தினரை அங்கே அழைத்துக் கொண்டனர்.

இவ்விதம் ஆயிஷா நாயகி மதீனா வந்த பின்னரும் சில மாதங்கள் உடல்நலமின்றிப் படுத்து விட்டார். எனவே, மணமாகி ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே அவர்கள் கணவர் வீட்டுக்கு அனுப்பப் பட்டார்கள் என்பது முற்றும் சரியாக இருக்கலாம். ஆனால், அவர்களுடைய திருமணச் சமயத்தில் அவர்கள் வயது ஆறு என்பதை ஒப்புக்கொள்ள இயலவில்லை. அப்போது அவர்கள் ஒன்பது வயதடைந்திருந்தார்கள் (எனவே, அவர்கள் தமது பதினான்காம் வயதில் கணவர் வீடு புகுந்தார்கள்) என்பதே கீழ்க் காணும் ஆதாரங்களால் தெரியவருவதாகும்.

1. ஆயிஷா நாயகியை ஏற்கனவே ஜுபைர் இப்னு முதிம் என்பவருக்குக் கொடுப்பதாக ஏற்பாடாகியிருந்தது. அரபு நாட்டில் இவ்விதம் ஏற்பாடு செய்வது குழந்தையின் மூன்று முதல் ஆறு வயதுக்கு உள்ளாகும். ஆயிஷா நாயகியை நபிபெருமானாருக்கு மணம் பேசும் போது இவ்விதம் நடந்து சில வருடங்களேனும் கழிந்திருக்க வேண்டும். தமது அருமைத் தோழரான அபூபக்கரின் மகளுக்கு இவ்விதம் ஓர் ஏற்பாடு நடந்திருந்தது என்பது அபூபக்கர் தெரிவித்தே நபிபெருமானாருக்குத் தெரியலாயிற்று.

2. ஆயிஷா நாயகி, நபிபெருமான் நபிப்பட்டம் பெற்ற அதே ஆண்டில் அல்லது மறு ஆண்டில் பிறந்தவர்கள் என்பதற்குச் சரியான ஆதாரமுள்ளது. 'அல்-கமர்' என்ற திரு குர்ஆன் (54- வது) அத்தியாயம் இறங்கிய போது, தாம் குழந்தையாக விளையாடிக்கொண்டிருந்ததாகவும், தாம் கேட்ட சில வசனங்களைத் தாமே ஓதிக் கொண்டிருந்ததாகவும் ஆயிஷா நாயகியே தெரிவித்துள்ளார்கள். இது இமாம் புகாரீயால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் இதை நினைவு வைக்கவும், கேட்ட வசனங்களை ஓதவும் கூடிய சக்தியுடையவராக ஆயிஷா நாயகி இருக்க வேண்டுமானால் அச்சமயம் அவர்களுக்குக் குறைந்தபட்சம் நான்கு வயதாவது ஆகியிருக்க வேண்டுமல்லவா! இந்த 'அல்-கமர்' அத்தியாயம் இறங்கியதோ நபிப்பட்டம் பெற்ற ஐந்தாம் ஆண்டில் தான் என்பதில் ஐயமில்லை. எனவே அவர்கள் நபி பெருமானார் நபிபட்டம் பெற்ற முதல் அல்லது(கூடிய பட்சம்) இரண்டில் பிறந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இதனால், அவர்களை நபிபெருமானார் மணந்துகொண்ட சமயம் அவர்களுக்கு ஒன்பது வயதாவது இருக்கவேண்டும் என்பது உறுதியாகிறது.

3. இப்னு சஅத் தம்முடைய 'தபக்காத்'தில் ஆயிஷா மணம் முடிக்கப்பட்ட போது அவர்களுக்கு ஒன்பது வயது என்றே தெரிவிக்கிறார்கள்.

4. நபிபெருமானாரின் புத்திரி பாத்திமா- நபிப் பட்டம் வருவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தவர்கள்- ஆயிஷாவை விட ஐந்து வயது மூத்தவர்கள்

என்று ‘இஸாபா’வில் கூறப்பட்டுள்ளது. எனவே, ஆயிஷா நாயகி நபிப்பட்டம் கிடைத்த இரண்டாம் ஆண்டில் பிறந்தார்கள் என்பதும், அவர்களுக்கு மணமுடிக்கப்பட்டபோது அவர்கள் வயது ஒன்பது என்பதும் விளங்குகிறது.

இதுபோன்று மேலும் பல தகவல்களிலிருந்தும் அவர்கள் மணம் முடிக்கப்பட்டது அவர்களுடைய ஒன்பதாம் வயதிலேயே என்பதும், அவர்கள் மணவாழ்க்கையில் புகும்போது அவர்களுக்கு வயது பதிநான்கு என்பதும் தெளிவாகிறது. எனவே, ஒரு பொறுப்புள்ள மனைவியாகவும், தம் கடமையை நன்குணர்ந்த மாதரசியாகவுமே ஆயிஷா நாயகி தமது கணவரின் வீட்டில் நுழைந்தார்கள்.

இவர்கள் நபிபெருமானாரின் வாழ்க்கையில் பெரும் பங்கு கொண்டதுடன், அக்கால அரசியல் வாழ்விலும் முப்பது வருடங்கள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்கள். ஏராளமான ஹதீஸ்களை நினைவில் வைத்திருந்து கூறினார்கள். திருக்குர்ஆன் வசனங்கள் சம்பந்தமான எத்தனையோ சந்தேகங்களைத் தெளிவித்தார்கள். இவர்கள் மூலம் சுமார் இரண்டாயிரம் ஹதீஸ்கள் வரை வெளியாகியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஹதீஸ்களைத் திருகுர்ஆனோடு ஒத்துப்பார்க்கும் முறையை உண்டாக்கியவர்கள் ஆயிஷா நாயகி எனலாம். திருகுர்ஆனுக்கு முரணான எந்த ஹதீஸையும் இவர்கள் ஏற்க மாட்டார். ஒரு சமயம், ஹதீஸ் கலையில் வல்ல, திருகுர்ஆன் வசனங்களில் நபி பெருமானாராலேயே ஐயந்தெளியவைக்கும் அறிஞராக ஒப்புக்கொள்ளப்பட்ட ஹள்ரத் இப்னு உமர் அவர்கள், “அழுபவர்களின் ஒப்பாரி காரணமாக, இறந்தவர் நரகவேதனை அனுபவிக்கிறார்” என்ற கருத்துள்ள ஹதீஸைக் கூறியபோது அதை ஆயிஷா நாயகி மறுத்தார்கள். “ஒரு பாரத்தைச் சுமப்பவன் யாரும், (தன் பாரத்தையன்றி) மற்றவர் பாரத்தைச் சுமப்பவனல்லன்” என்ற திருகுர்ஆன் வசனத்தைத் தமது மறுப்புக்ககு ஆதாரமாக இவர்கள் காட்டினார்கள். பிரஸ்தாப நபிமொழியின் உண்மையான தாத்பரியம் யாது என்பதையும் அது வெளியான சூழ்நிலையுடன் விளக்கி வைத்தார்கள். இவர்கள் சொன்னார்கள்: “ஒரு சமயம் நபிபெருமானார் வீதியில் சென்றபோது யூதப் பெண் ஒருத்தியின் பிரேதத்தைத் தூக்கிச் சென்றனர். அவளுடைய உறவினர் அதன் பின் அழுது அரற்றிக் கொண்டு சென்றனர். இதைக் கண்ட நபிபெருமான் பிரஸ்தாபத் திருமொழியை வெளியிட்டார்கள். அதாவது, அவர்கள் இங்கே அழுது அரற்றும்போது, அங்கே அவள் (அவளுடைய பாவங்களுக்காகத்) தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற கருத்தில்தான் இதைக் கூறினார்கள்.”

இவ்விதம் ஆயிஷா நாயகி பல அருமையான விளக்கங்களைத் தந்துள்ளார்கள். இந்த வழியையே பின்னர் இமாம் அபூ ஹனீபாவும், இமாம்

புகாரியும் பின்பற்றி ஹதீஸ்களின் தன்மையைச் சீர்தூக்கிப் பார்த்தனர். எனவே, முதன் முதலில் இஸ்லாமியைச் சட்ட விளக்கம் தந்தவர் ஆயிஷா நாயகி என்றே கூறி விடலாம்.

ஆயிஷா நாயகி இளமையும் புற அழகும் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காகப் பெருமானார் அவர்கள்மீது அன்பு செலுத்தவில்லை. அவர்களுடைய பரிசுத்தமான இதயமும், சத்தியப் பாங்கும், அன்பும், பரிவும், இரக்கமும், பணிவும் தாம் அவர்களைப் பெரிதும் கவர்ந்தவையாகும். ஆயிஷா ஸித்தீகா (உண்மையுள்ளவர்) என்றே அவர்கள் போற்றப்படுகிறார்கள். ஏனையப் பெண்களைப் போல் முதலில் உலகச் செல்வங்களையும், பொன்னையும் அவர்களும் விழையவே செய்தார்கள். அனால், அதைக் கண்டிக்கும் இறைவனின் திருமொழிகள் இறங்கியதும், நபிபெருமானாரின் மற்றப் பிராட்டியர்களைப்போல அவர்களும் அந்த ஆசைகளையெல்லாம் உதறி விட்டார்கள். மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார்கள். ஒட்டுப்போட்ட உடையையே அணிந்தார்கள்.

அவர்கள் கண்ணீர் ஆறாய்ப் பெருகத் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப் பார்கள்; இடையறாது தொழுகையிலீடுபடுவார்கள்; விடாது நோன்பு பிடிப்பார்கள். நள்ளிரவுத் தொழுகைக்கு நபிபெருமானாரோடேயே அவர்கள் எழுந்துவிடுவதுண்டு. வருடந்தோறும் ஹஜ்ஜு செய்து வந்தார்கள்.

இத்தகைய அன்னை மீதே நயவஞ்சகர்கள் அவதூறான ஒரு பொய்ச் செய்தியைத் திரித்துவிட்டனர். இறைவனே திருகுர்ஆன் மூலம் அதை மறுத்து அவர்களுடைய பரிசுத்தத்தைப் பாராட்டியுள்ளான்.

நபிபெருமானார் மரணித்தபின் ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) நபிபெருமானாரின் பிராட்டியார் அனைவருக்கும் சமமான மானியத்தை அளித்து வந்தார்கள். அடுத்துவந்த ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றவர்களுக்குப் பத்தாயிரம் திர்ஹமும், ஆயிஷா நாயகிக்கு மட்டும் பன்னிரண்டாயிரம் திர்ஹமும் கொடுத்தார்கள். ஹஜ்ரத் உதுமான் (ரலி) அனேகமாக அது போன்றே மான்யமளித்தார்கள். ஹஜ்ரத் அலீ (ரலி)யின் ஆட்சிக்காலம் ஆயிஷாவுக்கு மன நிம்மதியற்ற காலமாகிவிட்டது. முஆவியாவின் ஆட்சியில்தான் பதினெட்டு ஆண்டுகள் அவர்கள் நிம்மதியாக வணக்கங்களில் ஈடுபட்டுக் கொண்டு காலங்கழித்தார்கள்.

நபிபெருமானார் காலமான சமயம் ஆயிஷா நாயகிக்கு (நமது கணக்குப்படி) இருபத்தொரு வயது ஆகியிருந்தது. எனவே, அவர்களுடைய மணவாழ்க்கை ஏழு ஆண்டு காலமே நீடித்தது.

ஹஜ்ரத் அலீ(ரலி)அவர்களின் ஆட்சிகாலத்தில் அவர்களை எதிர்த்து பஸ்ராவில் நடந்த 'ஜமல்' (ஒட்டக) யுத்தத்தில் ஆயிஷா நாயகியும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டதாகவும். இதில் ஹள்ரத் அலீயின் படையை எதிர்த்து நின்ற ஹள்ரத் தல்ஹாவும், ஹஜ்ரத் ஜுபைரும் தோல்வியுற்று ஓடியதுடன், ஆயிஷா நாயகி ஏறியிருந்த ஒட்டகமும் கொல்லப்பட்டது என்றும், அதன்பின் ஆயிஷா நாயகி பாதுகாப்பாக, ஹஜ்ரத் அலீயால் மதினாவுக்கு அனுப்பப்பட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஆயிஷா நாயகி ஹிஜ்ரி 58 ரமலான் பதினேழில் தம்முடைய அறுபத்து ஏழாம் வயதில் காலமானார்கள். தாம் காலமான இரவிலேயே மதீனாவிலுள்ள பொதுவான அடக்கஸ்தலத்தில் தாம் அடக்கப்படவேண்டும் என்பது அவர்களுடைய இறுதி வேண்டுகோளாகும். அதன்படியே அவர்கள் நல்லடக்கஞ் செய்யப்பட்டார்கள்.

ஆயிஷா நாயகி இரக்கச்சித்தம் மிக்கவர்கள். ஏழைகளுக்குத் தம்மிடம் இருப்பதையெல்லாம் கொடுத்துவிடுவார்கள். அமீர் முஆவியாவின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு மான்யமாக ஒரு சமயம் லக்ஷம் திர்ஹங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதை ஓர் ஏனத்தில் கொட்டி வைத்துக்கொண்டு அள்ளி அள்ளி ஏழைகளுக்கு வழங்கி விட்டார்கள். அன்று மாலையில் அவர்கள் நோன்பு திறப்பதற்கு அவர்களிடம் எதுவுமிருக்கவில்லை.

இன்னொரு சமயம் அவர்கள் நோன்பு பிடித்திருந்தார்கள். அப்போது நோன்பு திறப்பதற்காக அவர்கள் வீட்டில் ஒரு ரொட்டி மட்டும் தயாராகியிருந்தது. அதையன்றி உண்பதற்கு வேறு எதுவுமில்லை. அப்படியிருந்தும் ஏழையொருவன் பசியுடன் வந்து உணவுகேட்டதும் அதை எடுத்து அவனுக்குக் கொடுத்தனுப்பிவிட்டார்கள்.

வயிறு நிறைய உண்பதற்குப் போதுமான உணவு இருந்து அதன்முன் அவர்கள் அமர்ந்து விட்டால் உடனே மாலை மாலையாகக் கண்ணீர்விடத் தொடங்கிவிடுவார்கள். "இப்படி அதிகமான உணவு என் முன் இருந்துவிட்டால் என்னால் கண்ணீரைத் தவிர்க்க முடியவில்லை" என்று அவர்கள் கூறினார்கள். இதைக்கேட்ட அவர்களுடைய பணிப்பெண் ஏன் என்று வினவியபோது, "இப்படிப்பட்ட சமயங்களில் இறைவனின் திருத்தூதரின் நினைவு எனக்கு உண்டாகிவிடுகிறது. அவர்கள் இரண்டு நேரம் சேர்ந்தாற்போல் ரொட்டியும் கறியும் வயிறார உண்டதில்லை" என்று ஆயிஷா நாயகி பதிலளித்தார்கள்.

ஒருநாள் இரண்டு குழந்தைகளுடன் ஏழைப் பெண்ணொருத்தி வந்து ஆயிஷா நாயகியிடம் பிச்சை கேட்டாள். அச்சமயம் அவர்கள் வீட்டில் மூன்று பேரீச்சம்

பழங்களே இருந்தன. அவற்றை எடுத்து அவர்கள் அந்தத் தாயின் கையில் கொடுத்துவிட்டார்கள். பசியால் வாடிய அந்தத் தாய் தான் ஒரு பழத்தை வைத்தக்கொண்டு, மற்ற இரண்டையும் தன் இரண்டு குழந்தைககளுக்கும் கொடுத்தாள். அவள் தன் பழத்தை வாயில் போடும்போது குழந்தைகளிரண்டும் தத்தம் பழத்தைத் தின்றுவிட்டன. அத்துடன் அவை தாயின் பழத்தை ஆவலுடன் நோக்கின. உடனே, அவள் தன் பசியையெல்லாம் அடக்கிக் கொண்டு, அந்தப் பழத்தை வாயிலிருந்து எடுத்த இரண்டாகப் பிரித்து இரண்டு குழந்தைகளுக்கும் கொடுத்து விட்டாள். இந்தத் தாயன்பைக் கண்ட ஆயிஷா நாயகி கண்ணீர் சொரிந்தார்கள்.

அடிமைகளை விடுவிப்பதிலும் அவர்கள் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். அவர்களே சுமார் ஐம்பத்தேழு அடிமைகளை விலைகொடுத்து வாங்கி விடுதலை செய்துள்ளார்கள்.

அவர்களிடம் நபிபெருமானார் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். வெளி அழகை மட்டும் வைத்துப் பார்த்தால், அன்னையர் ஜுவைரிய்யாஹ், சபிய்யா, ஜைனப், ஹப்ஸா ஆகியோர் ஆயிஷா நாயகியை மிகைத்தவர்களாகவே இருந்தனர். ஆனால் ஆயிஷா நாயகியின் மனப் பண்பும் சேர்ந்தே நபி பெருமானாரைப் பெரிதும் கவர்ந்து விட்டது. அவர்கள் தங்கள் பிராட்டியார்கள் யாவரையும் சமமான முறையிலேயே நடத்தினார்களாயினும், அவர்களிடை அநீதமாக நடந்து கொள்ளாமல் எச்சரிக்கையாக இருந்தார்களாயினும், அவர்களே ஒரு தடவை “இறைவா (என் மனைவியரிடை) நான் அநீதியிழைப்பின் அதற்காக நான் மறுமையில் உன்முன் குற்றவாளியாக நிற்கவேண்டியவன் தான்; ஆனால், ஆயிஷாமீது அன்பு பாராட்டுவதோ என்னை மீறியதாக இருக்கிறது. எனவே, இதற்காக என்னை மன்னித்தருள்!” என்று பிரார்த்தித்துள்ளார்கள்.

கீழ்க்காணும் ஐந்து காரணங்களுக்காக ஆயிஷா நாயகி, மற்றப் பிராட்டியார்களைவிட, நபிபெருமானாருக்கு அதிகப் பிரியமானவர்களாய் இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. பெருமானார் மணந்த ஒரே கன்னிப் பெண் அவர்கள் தாம். மேலும், அந்தத் திருமணம் தெய்வ உத்தரவுப்படி நடைபெற்றது. இரண்டாவதாக, நபிபெருமான் பிராட்டியார்களுள் அவர்கள் ஒருவர்தாம் பிறவியிலேயே முஸ்லிம், மற்றவர்கள் மதம் மாறி இஸ்லாத்தை ஏற்றவர்களே. மூன்றாவதாக, அவர்களுடைய பெற்றோர்கள் இஸ்லாத்துக்காகச் சகலவற்றையும் துறந்த முஹாஜிரீன்களைச் சேர்ந்தவர்களாவர். நான்காவதாக, தெய்வ வெளிப்பாடுகள் பல நபிபெருமானாருக்கு வெளியானதும், ஜிப்ரயீல் அதிகத்தடவை

வந்ததும் ஆயிஷா நாயகியின் வீட்டில்தான். கடைசியாக, நபிபெருமான் உயிர் துறந்தது அவர்களுடைய மடியில் படுத்தபடிதான்.

ஆயிஷா நாயகி நன்கு படித்தவர்கள். அறபுப் பாடல்கள் பல அவர்களுக்கு மனப்பாடமுண்டு. அவர்களுடைய பேச்சு தெளிவாகவும் கணீரென்றுமிருக்கும். அவர்கள் வைத்தியத்திலும் தேர்ச்சிபெற்றிருந்தார்கள். ஏழைகள் பலருக்கு இலவசமாக மருந்து கொடுத்து உதவினார்கள்.

ஆயிஷா நாயகி இறைவனிடம் மிகுந்த பயபக்தியுடையவர்களாக விளங்கினார்கள். சில சமயங்களில் இந்தப் பயம் காரணமாக, “நான் ஒரு மரமாகவாவது பிறந்திருப்பின் சதாவும் இறைவனைத் துதித்துக் கொண்டிருப்பேனே! நான் ஒரு கல்லாகவோ, புல்லாகவோ, மரத்தின் இலையாகவோ கூடப் பிறந்திருக்கக்கூடாதா? அல்லது, பிறவாமலே இருந்திருக்கக்கூடாதா?” என்றெல்லாம் அவர்கள் கூறுவதுண்டு. அன்னையரின் அறிமுகம் தொடரும்)

# அறிஞர்கள் போற்றும் அண்ணலார்!

முஹம்மது நபியின் வெற்றிக்கு முதல் காரணம், அவர்கள் கொண்டிருந்த உறுதியும் ஊக்கமும். இத்தகைய உறுதி அந்தக் காலச் சூழ்நிலையில் ஏற்படுவது எளிதன்று. இரண்டாவது காரணம். இஸ்லாம் போதிக்கும் சமத்துவமும் சகோதரத்துவமமாகும்.

வேதாகம, இதிகாச, புராணங்களின் காலங்கள் மலையேறிவிட்டன. ஆனால், திருக்குர்ஆன் இப்பொழுது உலகிற்கு வழிகாட்டியாயிருக்கிறது. உலக சீரமைப்புக்குப் பாடுபட்ட அண்ணல் நபிகள் பால் நான் கொண்டிருக்கும் மட்டற்ற மரியாதையின் காரணமாக, இரு முறை அரேபியா சென்று வரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. – ஜவஹர்லால் நேரு

ஆட்சி புரியும் அமைச்சர்கள் நபிபெருமான் வகுத்த சீர் திருத்தங்களை பின்பற்றி நடக்கவேண்டும்.

குர்ஆனும், அண்ணல் நபியின் அருள்வாக்கு என்று பரம்பரையாகச் சொல்லப்படுகின்ற ஹதீஸின் பல பாகங்களும் நேராகவோ மறைமுகமாகவோ சொல்லிக்காட்டாத விஞ்ஞானமோ கலையின் துறையோ இல்லை.

– மகாத்மா காந்தி

*தொடர் ( 29)*

# இனிக்கும் இறைமொழி

இறையருட் கவிமணி கா. அப்துல் கஃபூர் எம்.ஏ.

## சீரிய ஜும்ஆ சிறப்புத் தொழுகை

‘ஜும்ஆ’ என்னும் பெயரில் ஒரு அத்தியாயமே அருள்மறையுள் இடம் பெற்றுள்ளது. 11 வசனங்களைக் கொண்ட 62– ம் அத்தியாயத்தின் 9– வது வசனமே இக்கட்டுரைப் பொருளாக அமைந்தது. அவ்வசனத்தை விரிவாக ஆய்வதற்கு முன்னர் அந்த அத்தியாயம் அருளப்பட்ட சூழ்நிலையினை உணர்தல் நலம் பயக்கும். ஹள்ரத் ‘திஹ்யத்துல் கலபீ’ என்பார் பிற்காலத்தில் இஸ்லாமிய நெறியில் இணைந்துவிட்ட ஒருவணிகர். அவர் முஸ்லிமாக மாறுவதற்கு முன்னர், வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருட்களை மதீனாவுக்குக் கொண்டுவந்து விற்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். அவரது வருகையினை முரசொலி மக்களுக்கு உணர்த்தும். அவ்வொலியைக் கேட்டவுடன் மக்கள் திரண்டு அவரை மொய்த்து விடுவது வழக்கம். ஒரு வெள்ளிக்கிழமை மதீனா மஸ்ஜிதில் கோமான் நபியவர்கள் குத்பாப் பேருரை நிகழ்த்திக் கொண்டிருந்த தருணத்தில் அம்முரசொலி கேட்டது, பன்னிருவரைத் தவிர எஞ்சியோர் அனைவரும் நழுவிச் சென்றுவிட்டனர். பன்னிருவரும் பள்ளிவாயிலுக்குள் இல்லாமல் போயிருந்தால் வானிலிருந்து அனைவர் மீதும் கல்மாரி பொழியப்பட்டிருக்கும் என்பதாக ஏந்தல் நபியவர்கள் இயம்பினார்கள். அத்தருணத்தில் அருளப்பட்ட அத்தியாயம் இதுவாகும். இறைத்தூதர் அவர்கள் இன்னுரையாற்றும் அவையிலிருப்போர் அவ்வுரைகளில் கருத்தூன்றிச் செவிமடுக்க வேண்டுமென்றும், வெளியில் நிகழும் வேடிக்கை விளையாட்டுகளில் கருத்தைச் சிதறவிடலாகாதென்றும், அல்லாஹ்விடமிருப்பது, வேடிக்கை, வணிகத்தை விட சிறந்ததென்றும், உணவளிப்பதில் அல்லாஹ் மிக்க மேலானவனென்றும் இவ்வத்தியாயம் எடுத்தியம்புகின்றது. இவ்வத்தியாயத்தின் 9– வது வசனம் ஜும்ஆவின் சிறப்பையும் முஃமின்களின் கடமையையும் எழில்பட எடுத்துக் காட்டுகின்றது.

“விசுவாசிகளே! ஜும்ஆ நாளன்று தொழுகைக்காக அழைக்கப்பட்டால், வணிகத்தை விட்டு, அல்லாஹ்வை தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோர்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு மிக்க நன்று.” (62 : 9)

“விசுவாசிகளே” என்பதாக அன்பொழுக அழைத்து நாம் நம் கடமையை நிறைவேற்றப் பணிக்கின்றான், ஆற்றல் மிக்கோனாகிய அருளாளன். நன்மைகளை அள்ளி வழங்குகின்ற வெள்ளி நன்னாள், நண்பகல் நேரத்தில், தொழுகைக்குரிய அழைப்பாகிய அதான்– பாங்கு– பாங்காக விடுக்கப்பட்டவுடன் பாங்குடனே பள்ளிவாயில் நோக்கி விரையுமாறு காவலன் கட்டளையிடுகின்றான். “ஈமான் கொண்டவர்களே” எனப் பொதுவாக அழைப்பதால் அது மகளிரையும் உட்கொண்டதாக அமையுமோவெனும் ஐயமெழலாம். விசுவாசிகளே எனும் விளி, பெரும்பாலான இடங்களில் இருபாலரையும் உள்ளடக்கியதாகவும், சில இடங்களில் ஆண்களை மட்டுமே சுட்டுவதாகவும் அமைந்துள்ள இடங்கள் அருள்மறையில் உள்ளன. அதற்கோர் எடுத்துக்காட்டு சூறா அந்நிஸாவின் 19– ம் வசனம், மேலும், பெண்களுக்கு ஜும்ஆ கடமையென்பதைக் காட்டுகின்ற இறைவசனங்களோ நபி மொழிகளோ இல்லாமையால் பெண்களுக்கு ஜும்ஆ கடமை யாகாதெனத் துணிந்து கூறலாம்.

அடுத்தபடியாகத் “தொழுகைக்காக அழைக்கப்பட்டால்” என்னும் தொடர் எந்த அழைப்பைச் சுட்டிக்காட்டுகிறதென்பதை நோக்குவோம். வெள்ளிக்கிழமை கத்தீப் மிம்பரில் ஏறியபின் விடுக்கப்படும் அழைப்பு மட்டுமே அண்ணலார் அவர்களின் காலத்தில் இருந்துவந்ததாகவும், அவ்வழைப்புக்கு முன்னர், அதைவிட உரத்த குரலில் விடுக்கப்படும் அழைப்பு, ஹலரத் உதுமான் அல்லது ஹலரத் முஆவியா அவர்களால் வழக்கமாக்கிக் கொள்ளப்பட்டதாகவும் அறிகிறோம். எவ்வாறாயினும், தொழுகைக்குரிய அழைப்பைச் செவிமடுத்ததும், வணிகத்தை விட வேண்டியதும், பள்ளிவாயிலை நோக்கி விரைந்து செல்ல வேண்டியதும் நமது கடமையாகும்.

வணிகம் என்பது பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, வணிகர்கள் மட்டுந்தான் விரைந்து செல்ல வேண்டுமென்பதும், வணிகரல்லாத பிறர் விரைந்து செல்ல வேண்டியதில்லை என்பதும் பொருளல்ல. வணிகம் என்பது இங்கு பரந்த பொருளில் கையாளப்பட்டுள்ளது. மேலும் வணிகத்தில் காணப்படும் கவர்ச்சியும் லாபமும் மக்களின் மனத்தை மயக்கிச் சற்றுத் தாமதித்துச் செல்லத் தூண்டலாம் என்னும் கருத்தும் அதனுள் பொதிந்துள்ளது. ஃபஸ்அவ் என்பதன் வேர்ச் சொல்லாகிய “ஸஃஉ” என்பதற்குரிய முயற்சித்தல், ஓடுதல், விரைதல் என்பன பொருட்கள். பாங்குகேட்டவுடன், அலுவல்கள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ஆர்வத்துடன் செல்ல வேண்டுமென்பதே கருத்தாகும். பதறிப்போய் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஓடிச் செல்ல வேண்டுமென்பது கருத்தல்ல. “இதயத்தாலும் செயலாலும் முயலுதல்” என்பதாக கத்தாப் (ரலி) அவர்களும், “அதுகாலால் பாய்ந்து செல்வதல்ல, இதயத்தாலும் நோக்காலும் பக்தியாலும் விரைவதைக் குறிப்பதாகும்” என ஹஸன் (ரலி) அவர்களும் இத்தொடருக்கு விளக்கம் தந்துள்ளனர்.

இயன்ற அளவுக்கு முன்னால் தொழுகைக்குச் செல்ல வேண்டுமென்பதும், முற்கூட்டியே செல்வோர்க்கு வாய்த்திடும் நற்பயன்கள் பலவென்பதும் நாயக நன்மொழிகளால் அறியலாகும். இறையாணையைச் சிரமேற்கொண்டு ஜும்ஆக் கடமையை நிறைவேற்றாதவர்களின் பேரிழப்பைச் சுட்டிக் காட்டுகின்ற நபிமொழிகளும் பலவாகும். “ஜும்ஆவைத் தவறவிடுவோர் அச்செயலினைத் தவிர்த்துக் கொள்ளவும்; இல்லையெனில் நிச்சயமாக உங்கள் இறைவன் உங்கள் இதயங்களில் முத்திரையிட்டு விடுவான். அதன்பின்னர் அவர்கள் உண்மையையும் நேர்மையையும் உணரக்கூடிய ஆற்றலை இழந்துவிடுவார்கள்”– “எவனொருவன் கருத்தின்றி மூன்று ஜும்ஆக்களைத் தவற விடுகின்றானோ, அவனது இதயத்தில் அல்லாஹ் முத்திரை யிட்டுவிடுகின்றான்”– என்பவை ஆதாரமான நபிமொழிகள். இவ்வாறு இயம்பியதோடு மட்டுமன்றி ஜும்ஆவுக்கு வருகைதராதோர் இல்லங்களைத் தாம் கொளுத்தி விட நினைப்பதாவும் கோமான் நபியவர்கள் கூறியுள்ளார்கள். பொதுவாகத் தொழுகையையும், குறிப்பாக வெள்ளிநாள் கூட்டுத் தொழுகையையும் புறக்கணித்து வாழ்வோர் இம்மொழிகளின் வன்மையை உணர்தல் வேண்டும். நன்னேரத்தை மும்முர வணிகத்தாலும், வீண் களியாட்டுகளாலும் பாழ்படுத்திக் கற்பூரம் சுமந்த கழுதைகளைப் போல வாழ்வோர் கண்டனத்திற்குரியவராகின்றனர். இயலாத முதியோர், இயல்பாக நடக்க முடியாதோர், பெண்கள், சிறு குழந்தைகள் போன்றோருக்கு மட்டுமே வெள்ளிநாள் கூட்டுத்தொழுகையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறைமொழியில், “அழைப்பு விடுக்கப்பட்டால் தொழுகைக்காக விரைக” எனக் கூறாமல், “இறை தியானத்திற்காக விரைக” எனக் குறிக்கப்பட்டுள்ளது ஊன்றி உணரத் தக்கதாகும். அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள “திக்ர்” என்னும் சொல், குத்பாவையும் தொழுகையையும் ஒருசேரக் குறிப்பதாகக் கொள்வர். இமாம் அபூஹனீபா. இமாம் யூசுப், இமாம் முஹம்மது ஆகியோர் அச்சொல் குத்பா என்னும் பொருளில் வந்துள்ளதாகக் கூறுவர். “ஃகதப”– உரையாற்றினான்– என்னும் வினையடியாகப் பிறந்த அச்சொல் உரையாற்றுவதை– சொற்பொழிவைக்– குறிப்பதாகும். இறைவனை நினைவு கூர்வதற்காக அவனது சந்நிதானத்தில் உள்ளதை ஒருமுகப்படுத்தி தியானத்தில் ஆழ்ந்து வணங்குவதே தொழுகையாகும். அதற்குத் தேவையான இறையுணர்வையும், இறையச்சத்தையும் மக்கள் நெஞ்சங்களில் ஊன்றுதற்குரிய முறையில் குத்பாச் சொற்பொழிவு அமைந்திருக்க வேண்டும். மின்கட்டையிலே ஆற்றலை ஏற்றவது போல, ஏழு நாட்களுக்கொரு முறை மக்கள் மனங்களுக்கு எழுச்சியூட்டுகின்ற கொள்கை மின் ஆற்றலாகக் குத்பாக்கள் அமைந்திருக்க வேண்டும்.

லுஹர் தொழுகைக்குரிய நான்கு ரக்அத்துகளின் இடத்தில் வெள்ளிநாள் கூட்டுத் தொழுகையின் இரு ரக்அத்துகளும், குத்பா இரு ரக்அத்துகளின் மதிப்பைப் பெறுகின்றன. குத்பாவும் வணக்கமாகவே கருதப்படுதல் வேண்டும். வருகை தந்தோர் உள்ளங்களில் இறையுணர்வையும் நெறியுணர்வையும் நிலை நாட்டுவதே குத்பாவின் அடிப்படைக் கருத்தாகும். உரையாற்றும் கத்தீப்மார்களின் உள்ளத்திலிருந்து பிறக்கும் உரைகளே செவிமடுப்போர் நெஞ்சங்களைப் பற்றிப் பிடிக்க முடியும் ஆகவே செவி வாயாக, நெஞ்சு களமான உரைகளை உட்கொள்ளுதல் வேண்டும். இமாம் குத்பா ஓதும் போது பேசிக்கொண்டிருப்பவர். பொதி சுமக்கும் கழுதையைப் போன்றிருக்கிறார் என்பதும், அப்படிப் பேசிக் கொண்டிருப்பவரைப் பார்த்து வாய்மூடி இருக்கச் சொல்பவரின் ஜும்ஆ நிறைவடையாதென்பதும் அண்ணல் பெருமானார் அவர்கள் அருளியுள்ள எச்சரிக்கையாகும். குத்பா நிகழ்த்தும்போது பேசிக் கொண்டிருப்பவர் அறிவிலிகளே யென்பதும் அந்நேரத்தில் அவருக்கு அறிவுரை கூறுவோர் குத்பாக் கேட்கும் வாய்ப்பைத் தாமும் இழக்கின்றார் என்பதும் கருத்தாகும். குத்பாவுக்காகப் பள்ளியை அடைந்த பின்னரும், வீண் விளையாட்டுகளிலும் நையாண்டிச் சிரிப்புகளிலும் நேரத்தைப் போக்குவதும் வெறுக்கத்தக்கதாகும். குத்பா நிகழ்த்துகையில் ஒரு கல்லையெடுத்தெறிவது கூடத் தவிர்க்கப்பட வேண்டும். சிலர் குத்பா முடிந்து தொழுகை தொடங்கும் தருணத்தில் பள்ளிக்குள் நுழைந்து விட்டு, தொழுகை முடிவடைந்தவுடனேயே துள்ளிக் குதித்து வெளியேறுவதைப் பார்க்கிறோம். நல்லுரையைக் கேட்டு அதன்படி நடக்காத குற்றத்திற்கு ஆளாகாமலிருக்க அவர்கள் அவ்வாறு செய்கிறார்களோவென நினைக்கத் தோன்றுகிறது.

அண்ணலார் அவர்கள் காலத்தில் குத்பாச் சொற்பொழிவு எவ்வாறு அமைந்திருந்ததென்பதை நோக்குவோம். இறைத்தூதர் அவர்கள் இரு குத்பாக்கள் நிகழ்த்தி வந்துள்ளார்கள். இரண்டிற்குமிடையே சற்று அமர்ந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஒரு கூட்டத்தின் மீது பகைவர்கள் படையெடுத்து வரும்போது அக்கூட்டத்தின் தலைவர் எவ்வாறு தம் குழுவினருக்குக் கட்டளையிடுவாரோ, அதே தன்மையிலும் குரலிலும் அண்ணலார் அவர்களின் குத்பாக்கள் அமைந்திருந்ததாக அறிகிறோம். உரையாற்றும் போது உத்தமத் திருநபி அவர்களின் குரல் உயரும்; ஆவேசம் அதிகமாகும்; கண்கள் சிவக்கும்; பல தடவைகள் கையினால் சைகை காட்டப்படும். அவையிலிருப்போர் யாரேனும் தவறு செய்தாலோ தகுதியற்ற முறையில் நடந்து கொண்டாலோ, உடனே அவர்களின் பெயரை எடுத்துச் சொல்லியோ சொல்லாமலோ அவர்களை திருத்தியுள்ளார்கள். ஒருவர் ஒருபோது தாமதமாக வந்து வரிசைகளைக் கடந்து சென்றபோது,

அண்ணலார் அவர்கள், "தாமதித்து வந்து தொல்லை கொடுக்கிறீரா? அங்கே அமர்க" எனச் சொன்னார்கள். ஒருபோது ஏழையொருவரை அவையில் கண்டபோது அவர் மீது கருணை காட்டுவதற்காகப் பிறரைத் தூண்டினார்கள். நாட்டில் தண்ணீர் பஞ்சமும் வறட்சிமும் ஏற்பட்டிருந்த ஒரு தருணத்தில், அவை நடுவேன் ஒருவர் எழுந்து நின்று, மழைக்காக இறைஞ்சுவதற்கு அண்ணலார் அவர்களை வேண்டிக்கொள்ள, மிம்பரிலிருந்து இறங்காமலே பெருமானார் அவர்கள், பிரார்த்தித்ததும் மழை பொழிந்தது.

குத்பா அறபு மொழியில் மட்டுமே நிகழ்த்தப்பட வேண்டுமா என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்துள்ளன. கேட்போர் உள்ளத்தில் இறையச்சமும் இறையுணர்வும் மிகுவிப்பதே குத்பாவின் நோக்கமென்றால், அவையோர் புரிந்து கொள்ளும் மொழியில் குத்பா அமைந்திருக்க வேண்டியதே முறையாகும். ஹம்து, ஸலவாத்து ஆகிய பகுதிகள் அறபு மொழியில் அமைந்திருக்க வேண்டுமென்றும், அறிவுரைப் பகுதிகள் அறபியிலேயே அமைந்திருக்க வேண்டிய கட்டாயமில்லையென்றும் சட்ட மேதைகளாகிய உலமாப் பெருமக்கள் தீர்ப்பளித்துள்ளார்கள். அதற்கிணங்க இன்று வட்டார மொழிகளில் குத்பா உரையாற்றுவது வழக்கமாகி விட்டது. மாமேதை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் இக்கருத்துக்கு ஆதரவளித்து அறபி குத்பாக்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள்.வேறு பல அறிஞர்களும் குத்பா தொகுப்புகளை ஆக்கியளித்துள்ளனர் ஹலரத் அலீ (ரலி) அவர்கள் நிகழ்த்தியதாகக் கருதப்படும் குத்பாப் பேருரைகளின் தொகுப்பென்று பெர்லினிலுள்ள அரசாங்க நூல் நிலையமொன்றில் பாதுகாப்புடன் இருப்பதாகவும் அறிகிறோம். இன்னொரு குத்பாத் தொகுப்பு அலிஃப் என்னும் எழுத்தே இல்லாத சொற்களால் ஆக்கி அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

குத்பாவுக்கு இவ்வளவு சீரும் சிறப்பும் அமைந்திருக்கின்ற போது, அதனை ஆற்றுகின்ற கத்தீபுகளின் நிலை எவ்வாறு உயர்வாக அமைந்திருக்க வேண்டுமென்பதையும் உணரலாம். இன்றும் சில இடங்களில் கத்தீப் பதவியைப் பரம்பரைச் சொத்தாகப் பாவித்துக் கொண்டு காப்பிரைட் குத்பாக்களை ஓதி வருகின்ற நிலையினைப் பார்க்கின்றோம். கத்தீப்மார்கள் ஊதியத்திற்காக மட்டுமே உரையாற்றுகின்ற கைப்பிள்ளைகளல்லர். உலக நிகழ்ச்சிகளையும் நாட்டு நடப்புகளையும் விருப்பு வெறுப்பற்ற முறையில் எடுத்துரைத்து சமுதாய மக்களுக்கு நல்லுணர்வூட்டி வழிகாட்டுகின்ற வகையில் கத்தீப்மார்கள் பணியாற்ற வேண்டும். இறைவனுக்கன்றி வேறு எவருக்கும் அஞ்சாத நெஞ்சத் துணிவை அவர்கள்

பெற்றிருக்க வேண்டும். ஜமாஅத் நிர்வாகிகளும், மஸ்ஜித் முத்தவல்லிகளும் மார்க்கநெறிகளுக்கு முரண்பட்டு மனம்போன போக்கில் செல்லக் கண்டால், அவர்களைக் கண்டித்துத் திருத்தக்கூடிய துணிவைப் பெற்றிருக்க வேண்டும். மக்களிடையே தீய செயல்களும் தவறான கொள்கைகளும் நுழையும் போது ஊக்கமுடன் நேர்வழியை எடுத்துரைத்துத் திருத்துகின்ற திட்பம் பெற்றிருக்க வேண்டும். பதவியைக் காப்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டிருந்தால் இறைவனுக்கு மறுமொழி கூறியாக வேண்டும்.

"நீங்கள் அறிவுடையவர்களாக இருந்தால் உங்களுக்கு இதுவே மிக்க நன்று" என்பதாக வசனத்தின் பிற்பகுதியில் அமைந்துள்ள தொடரில் புதைந்துள்ள நுட்பங்கள் ஊன்றி உணரத்தக்கன. சற்று நேரம் வணிகத்திலுள்ள கொடுக்கல் வாங்கல்களை நிறுத்திவைப்பதனாலுண்டாகும் இழப்பையும், ஜும்ஆவில் பங்கெடுப்பதால் கிடைக்கும் லாபத்தையும் ஒப்பிட்டு நோக்குவோர் உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். "இதுவே மிக்க நன்று" என்பதன் பொருள், இதுவே உங்களுக்கு மிக்க லாபகரமானது என்பதாகும். குத்பாவிலிருந்து பெறுகின்ற அறிவும் ஞானமும்; கூட்டுத் தொழுகையினால் விளைகின்ற நன்மைகள்; ஒரு வட்டார மக்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்வதால் ஏற்படுகின்ற பயன்கள்; அனைத்திற்கும் மேலாக இறையாணைக்குக் கீழ்ப்படிந்து, சற்று நேரம் உலக விவகாரங்களிலிருந்து விலகி இறையில்லத்தில் தியானத்தில் ஆழ்ந்திருத்தல்– இவை ஒவ்வொன்றும் இறை நம்பிக்கையுடைய விசுவாசிகள் பெறுகின்ற பெரும் பேறுகளாகும்.

தலைப்பில் கண்ட வசனத்தைத் தொடர்ந்து வருகின்ற வசனம், தொழுகை முடிந்த பின்னர் என்ன செய்ய வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுகின்றது.

"பின்னர் தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டதும், (பள்ளி வாயிலிலிருந்த வெளிப்போந்து பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடித் கொள்ளுங்கள்; அன்றியும் நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, அடிக்கடி அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யுங்கள்." (62 : 10) அண்ணலார் அவர்கள் காலத்தில் மதீனாவில் வாழ்ந்த யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவர்களுக்குச் சிறப்பான சனி ஞாயிற்றுக்கிழமைகளில், எத்தகைய அலுவல்களிலும் ஈடுபடாமல், அந்த நாட்களை ஓய்வு நாட்களாகப் பயன்படுத்தி வந்தனர். அவ்வாறு முஸ்லிம்களும் வெள்ளிக்கிழமையை ஓய்வுநாளாகப் பயன்படுத்த வேண்டாமென்பதை இவ்விறை மொழியின் கருத்தாகும். ஆகவே தொழுகைக்குப் பின்னர் பூமியில் பரந்து சென்று இறையருளைத் தேடிக் கொள்வதற்காகப் பணிக்கப்பட்டுள்ளது. தொழுகையில் பெற்ற இறையுணர்வு

மின்னாற்றல் போல் இதயத்தில் இலங்கி நம் வாழ்க்கையில் வனப்பும் வளமும் செறிந்து, வெற்றிகள் வந்து குவியுமென்றும் தூய நாயன் தொடர்ந்துரைக்கின்றான்.

அள்ளிச் சொரியும் நன்மைகள் செறிந்த வெள்ளி நன்னாளில், முஸ்லிம் மக்கள் பள்ளி வாயில்களில் ஒன்று திரண்டு தொழுகின்ற காட்சி, பிற மதத்தார் பலரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளது. வரலாற்றுப் பேராசிரியர் ஹிட்டி என்பாரின் வழியாக அக்காட்சியின் மாட்சியினைக் காண்போம்.

**"Standing erect in self arranged rows in the mosque and following the leadership of the Imam with precision and reverence the worshippers present a sight that is always impressive".**

தாமே வரிசையாக வகுத்துக் கொள்ளுகின்ற அணிகளில் நேராக நிமிர்ந்து நின்றுகொண்டு, திட்டமாகவும் மரியாதையுடனும் சற்றேனும் பிசகாமல் இமாம் அவர்களின் தலைமையைப் பின்பற்றிப் பள்ளிவாயில்களில் அணிவகுத்து நிற்கின்ற அடியார்களின் காட்சி நெஞ்சங் கவர்வதாகும்.

இவ்வாறு பிறநெறிப் பேரறிஞர்களாலும் பாராட்டப் படுகின்ற வெள்ளிநாளில் நன்மைகளைக் கொள்ளையிடாமல் அந்நாளின் புதையல்களைப் புறக்கணித்து வாழும் அறியாமையை என்னென்றுரைப்பது?

முன்னாளில் வாழ்ந்த ஆபிதீன்களெனப்படும் வணக்கவாளிகள் அந்நாளில் சூறா இக்லாஸ் ஆயிரம், ஸலவாத்து ஆயிரம், இஸ்திஃபார் ஆயிரம், ஸுப்ஹான கலிமா ஆயிரம் ஓதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

எல்லோரும் அதனைப் பின்பற்றுதல் கடிதாயினும் வெள்ளியன்று அஸர்த் தொழுகைக்குப் பின்னால் அண்ணலார் மீது ஸலவாத்து உம்மீ எண்பதும் ஆயத்துல்குர்சீ 17 தடவையும் ஓதிவருவது மிக்க பயனைத்தரும். அந்நாளில் பொதுவாகத் திருமறையை– குறிப்பாக சூறா கஹ்ஃபினை– ஓதிவருவதன் பயனை அண்ணல் பெருமானார் அவர்களே கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். ஜும்ஆவின் நோக்கத்தையும் குறிக்கோளையும் மனத்திலே பதித்துச் செயலாற்றி வருவது தனிமனிதனின் உயர்வுக்கும் சமுதாயச் சிறப்பிற்கும் வழிகோலுமென்பதில் எத்தகைய ஐயமுமில்லை.

**சீரிய ஜும்ஆ சிறப்புத் தொழுகை**

**சீரிய பயனும் செழிப்பும் மிகுக்கும்.**

---

*மறைஞானப்பேழை வாங்குகின்றீர்கள்; வாசிக்கின்றீர்களா?*

# இஸ்லாத்தின் உண்மை...

*வழுத்தூர், அஸ்ஸையித். முஹம்மது தாஹிர் பாவா வலிய்யுல்லாஹ் ஹஸனீ, காதிரீ (ரலி) அவர்களின் சுயம்பிரகாசம் நூலிலிருந்து..*

## *இஸ்லாத்தின் உண்மையைப் பற்றிய உபந்நியாசம்– 3*

**ஆண்டவனின் அகமியம்:**

1. ஆண்டவன் தான் ளியாயிருப்பதையும், தான் வெளியாகாமலிருப்பதையும், இனிமேல் தான் வெளியாகப் போகும் விதத்தையும் அறிந்திருக்கிறான்! அவன் அறிவு மகா அகண்டமான விகாசம்! அது ஆகாயத்துக்கும் அதீதமாயுள்ளது! அதில் மூர்த்தியின் பதவியை அடைந்தவர்கள் இந்த விகாசத்தில் செல்லக் கூடும்!

2. சில சமயம் ஆண்டவன் இஷ்டப்படி விதிப்பயன்களை அறியவும், ஆண்டவன் இஷ்டப்படி அதை மாற்றவும் அவர்களுக்கு வல்லமையுண்டு! இந்தப் பதவியையடைவதற்கு ஆண்டவனுடைய பரிபூரணமான கருணை வேண்டும்! ஆண்டவனின் இஷ்டத்துக்கு ஒற்றுமையாய் இருப்பவர்களுக்கே இந்தப் பதவியை அளிக்கப்படுகிறது!

3. பிரளய காலத்தில் ஆண்டவன் பிரமத்தில் ஐக்கியமாவான்! நூதன சிருஷ்டிப்புகள் மூர்த்திப் பதவியை அடைந்தவர்களால் ஆரம்பமாகும். மூர்த்திகளும் மூர்த்தி ரஸூல்மார்கள்! அஃதாவது தூதர்கள்! மூர்த்திகளும் "அக்தாப்" எனப்படும் மூர்த்திகளெல்லாம் ஒன்றுதான்! அதில் முதன்மையானவரில் ஒன்று சேர்ந்து ஏகமாய்விடும்! பிரமத்தினிடம் கருணையைப் பெற்று சிருஷ்டிக்கப்படும்! பிரமத்தில் ஐக்கியமானதுக்கு (மீண்டும்) வேலையில்லை!

4. மாமூல் என்பது விதியில் நின்றுமுள்ளது! ஆண்டவனுடைய அறிவில் வெளியானது! உலகத்தில் ஆண்டவனால் குறிக்கப்பட்ட விதமாக நடைபெறும்! இயற்கைக்கு மாற்றமென்பது விதியைக் கொண்டு சம்பந்தமுள்ளது. ஆண்டவன் அறிவில் வெளியானது, என்றாலும் ஆண்டவனால் நடைபெறும் வழமையின் பேரில் நடைபெறாது. ஆனால் விதிப்படி நடைபெறும்!

5. சில சமயம் இது பரிசுத்த மகான்களால் நடைபெறும்! அப்பொழுது இதை ஆண்டவனால் உண்டாகும் அற்புதம் எனப்படும்! சிலசமயம் வலுவான சித்தமுடையவர்களால் நடைபெறும். இவர்கள் பரிசுத்த மகான்களல்ல!

ஏனென்றால், இவர்கள் இயற்கையில் நல்லவர்களாகவும் கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள்!

6. நல்லவர்களாயிருப்பவர்கள் ஆண்டவனிடம் சுய அதிகாரம் பெற்றிருப்பார்கள்! அவன் இஷ்டத்துக்கு மாறாக நடக்கமாட்டார்கள்! இவர்கள் பரிசுத்த மகான்களாயிருக்கும்! அப்படி சுய அதிகாரம் பெறாதவர்களாயிருந்தால், அவர்களை சத்கருமமுள்ள பக்தர் அல்லது மோக்ஷத்துக்கு அருகர் என்று சொல்லப்படும்! கெட்டவர்களாயிருப்பவர்களைச் சூனியக்காரர்களென்று சொல்லப்படும்!

7. இவர்களில் ஒவ்வொருவரும் உலகத்தில் இயற்கைக்கு மாற்றம் செய்வார்கள்! இவர்களுக்கு பூத குணம், கிரக குணம், பதார்த்தகுணம், மந்திரம், மை முதலானதுகளைக் கொண்டு உதவி கிடைக்குமானால் வெற்றி அடைவார்கள்! இல்லாவிட்டால் இல்லை. என்றாலும் எந்தக் காரியத்தில் தங்கள் மனதைச் செலுத்துகிறார்களோ, அதில் அவர்களுக்குத் திறமையுண்டாகும். (ஆனால்) சுயத்தின் திறமை அதிக மேலானது! அது கடவுளைச் சேர்ந்தது!

8. சுய அதிகாரம் அல்லது சுய ஆட்சித் தத்துவம் தெய்வீக பாகம் பிரமத்தைச் சேர்ந்தது; யாவருக்கும் பொதுவானது; எல்லாத் தத்துவத்தைவிட அதிக மகிமையுள்ளது; இதை “விலாயத்து” எனப்படும்! தீர்க்கதரிசனப்பட்டம் இதற்குக் கீழ்ப் பதவியிலுள்ளது. ஆண்டவன் உதயம் அல்லது உதிப்பில் நின்றுமுள்ளது. இது சிலருக்கு மட்டும் சொந்தம். இதை “நுபுவத்” எனப்படும்.

9. தூதாங்கர் பட்டம். இது நுபுவத்தைவிட தாழ்ந்த பதவியில் உள்ளது. ஆண்டவன் நாட்டம் அல்லது, அறிவில் நின்றுமுள்ளது, இதுவும் சிலருக்கு மட்டும் சொந்தம். இதை “ரிஸாலத்து” எனப்படும்! ஒருவரில் இந்த மூன்று பதவியுமிருக்குமானால், ஒரே பதவியில் உள்ளவர்களைவிடச் சிறந்தவராயிருக்கும்!

10. தூதாங்கர்த்தனமுள்ளவர்களுக்கு மனிதப் பண்பு அதிகமாய் இருக்கும்! ஏனென்றால், அவர்கள் மனிதரோடு அதிகப் பழக்கம் வைக்க வேண்டியதாயிருக்கும். இவர்கள் வேதமும் தாராளமாக மனிதவர்க்கம் அடங்கலுக்கும் உலக முழுமைக்கும் அவசியமான தாயிருக்கும்! தீர்க்க தரிசனமுள்ளவர்களுக்கு அமரர் குணம் அதிகமாயிருக்கும். ஆகவே, தேவ வசனத்தை அமரர் மூலமாய்ப்பெறுவார்கள். தீர்க்க தரிசிகள் சில சமயம் மார்க்கமுள்ளவர்களாயும், வேதம் உள்ளவர்களாயும் இருப்பார்கள்! சில சமயம் அப்படிக்கில்லை. ஆகையால் தீர்க்கதரிசனம், தூதாங்கர்த்தனமென்று இரு பகுதியாகக் கூறப்பட்டது!

11. சுய அதிகாரம் தத்துவமுள்ளவர்களுக்கு தேவப்பண்பு, அதிகமாயிருக்கும்! ஆண்டவனிடமிருந்து தேவ வசனங்களை சுலபமாய்ப் பேசுவார்கள்! இவர்கள் வேதமும், மார்க்கமும் கொண்டு வரமாட்டார்கள். ஆகையால் இவர்களும், வேதம்– மார்க்கம் கொண்டுவராத, தீர்க்கதரிசிகளும், வேதம்– மார்க்கம் கொண்டு வந்த தீர்க்கதரிசி அல்லது தூதாங்கரின் மகத்தையும், வேதத்தையும் பின்பற்றியிருப்பார்கள்!

**தூதாங்கரின் அகமியம்:**

1. அழிவும், உற்பத்தியும் மாறாமல் நடந்து கொண்டிருக்கிறது. பிரமம் தனித்திருக்கிற வழமையில்லை. பிரமத்திற்கு ஊர்த்வமுகம், அதோ முகம் என இரண்டு தன்மையுண்டு. ஒன்று அரூபத்தின் மீட்சி, மற்றொன்று சொரூபத்தின் மீட்சி, இரண்டுக்கும் நடுமையத்தில் நடு நிலையாக ஆண்டவனுண்டு!

2. இப்படியே சர்வத்தையும் உத்தேசித்துக் கொண்டு ஒன்றை ஆத்மா, ஒன்றை மனம், ஒன்றைப் பிரகிருதி எனப்படுகிறது, பிரகிருதிக்கும், ஆத்மாவுக்கும் மையத்தில் நடு நிலையாக இருக்கிறது. மனம் பிரமத்தை சில சமயம் வேத வாக்கியத்தின் வழமையில் ஆண்டவனென்றே சொல்லப்படும்!

3. நரகம் போகிறவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். சொர்க்கம் போகிறவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் மன்றாட்டம் பாவிகளுக்குப் பெரியோர்களால் ஆகிக்கொண்டு வருகிறது. அவர்கள் இம்மையிலும், மறுமையிலும் தங்கள் தங்கள் காரியத்தைப் பார்த்துக் கொண்டு வருகிறார்கள்!

4. ஒரு வஸ்து அழிந்தவுடன் அதற்குப் பிரளயமாய் விட்டது! பிரமத்தில் செல்லுமானவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். கடவுள் பிரமத்தில் ஐக்கியமாகிக் கொண்டிருக்கிறார்! இவருக்குக் கீழ் மூர்த்திகளின் ஆத்மாக்கள் ஒன்று சேர்ந்து பிரமத்தின் கருணையைப் பெற்று நூதன சிருஷ்டிப்புகள் சிருஷ்டிக்கப்படுகிறது.

5. ஆண்டவனுக்கு மூர்த்திகள் பிரதிநிதி ஆகிவிடுகிறார்கள்! சகல காரியமும் ஓயாமல் நடந்து கொண்டு இருக்கிறது. இவைகளுக்குக் கூடுதல் குறைச்சலான கால வித்தியாசமுண்டு. ஆகையால், ஏககாலத்தில் உற்பத்தியும் அழிவுமில்லை. சூரியன்ஆளுகையில் சம்பந்தப்பட்ட கோளம் அல்லது உலகங்கள் ஏககாலத்தில் அழியும், அல்லது சிலது அழியும்; ஆக எல்லாம் அழிவுக்கு உடையதே!

6. இதன் காலத்தை குறிக்க முடியாது, எல்லா அழிவையும் உத்தேசித்து ஏககாலமென்று சொல்லப்பட்டது. சிலதொகுதிகள் முன் பின்னாக அழிவதும் நிஜமே!ஒரு கிரகம் அழிவதும் நிஜமே! அதைச் சேர்ந்த சிலது அழிவதும் நிஜமே!

ஒரு கிரகத்தின் ஆள்கையின் சங்கிலிக் கோர்வையில் எல்லாம் அழிவதும் நிஜமே! ஏனென்றால், இந்தச் சூரியன் **(Solar System)** சம்பந்தப்படாத உலகங்கள் அனேகம் இருக்கின்றன!

7. நமது சுபாவத்தில் பிரகிருதியின் செய்கையால் ஜலதோஷம் அல்லது நீர்க்கோர்வையிருக்குமாயின், கனவில் ஜலத்தில் நீந்துவது போலும், முக்குளிப்பது போலும் பிரத்தியக்ஷமாய்க் காணுவது உண்டு! அதைப்போல் நாம் வேகமான ஜுரத்தில் இருப்போமாயின், அக்கினி எரிவது போல் பிரத்தியக்ஷமாய் அடிக்கடி கனவில் காண்கிறோம்! இதைப் போல் நமக்கு வாய்வு அதிகப்பட்டு வாய்வு ரோகத்தில் இருப்போமாயின் பிரத்தியக்ஷமாய் கனவில் அடிக்கடி பறக்கக் காண்கிறோம்!

8. ஆகையால், நாம் உண்மையில் தரிபட்டு, நமது செயல்களும் உண்மையில் நீதம் தவறாமல் ஆண்டவன் பொருத்தத்துக்கு வழிபட்டதாய் இருந்தால், உங்களுக்கு மேலான சொர்க்கத்தைக் கொண்டு அவன் வார்த்தைப்பாடு செய்கிறான்! அதைப் பிரத்தியக்ஷமாகக் காண்பீர்கள். இல்லாவிட்டால் கொடிய நரகத்தைக் கொண்டு வார்த்தைப்பாடு செய்கிறான்; அதைப் பயந்து கொள்ளுங்கள்.

9. உங்கள் சுயத்தில் நின்றும் நரகத்தையும் சொர்க்கத்தையும் வெளியாக்கப்படும்! அதில் நீங்களே வாசம் செய்வீர்கள்! உங்கள் சுயம் என் சுயமாய் இருப்பதை நீங்கள் அறியவில்லையா? என் சுயத்தில் நின்றும் வானத்தையும் பூமியையும் நான் படைக்கவில்லையா? நீங்கள் என் சொரூப அம்ஸங்கள் அல்லவா? ஆதியில் என் சொரூப அம்ஸங்களென்று நீங்கள் ஒப்புக்கொள்ள வில்லையா? என்று ஆண்டவன் கேட்கிறான்!

10. நம் அறிவு எதார்த்தத்தில் இருக்குமாயின் இதையெல்லாம் அறிந்தேயிருக்கும்! நம்மைப் பாம்பு கடிக்குமானால் பாம்பினால் அவஸ்தைப்படுகிறோம். பாம்பு கடித்துவிட்டுப் போய்விட்டது. அதைக் கவனத்தில் எடுக்கும்போது விஷத்தால் உபத்திரவப் படுகிறோம். இன்னும் ஆழமாகக் கவனித்தால் புலன்களினால் உபத்திரவப்படுகிறோம். இன்னும் ஆழமாய்க் கவனித்தால் நம் அறிவினால் உபத்திரவப்படுகிறோம். நம் ஞாபகத்தில் பாம்பும் அதன் விஷமும்தான்!

11. ஆக, இன்ப துன்பம் நம் அறிவுக்குத்தான்! உணர்ச்சியில்லாமல் பிரம சொரூபத்தில் ஆய்விட்டால் இன்ப துன்பமற்ற ஆனந்தத்தில் ஆய்விடலாம்! சுய இலட்சியத்தைத் தவறவிட்டால் அசலைப் பெற்றுக்கொள்ள ஏலாது! ஆக நெருப்பின்றி நெருப்பின் வேதனையும், பாம்பின்றி பாம்பு கடி வேதனையும் உண்டாகும். பெண்ணின்றி பெண்ணின் சுகமும், உணவின்றி உணவின் சுகமும் உண்டாகும்!

**வேதத்தின் அகமியம்:**

1. என் அடிமைகள் என்னைப்பற்றி நான் எங்கே? என்று கேட்பார்களாகில், சொல்வீராக: "அவன் உங்களைவிடச் சமீபமாய் இருக்கிறான். பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனையை கேட்கிறான். பிரார்த்தனைகளால் அவர்கள் அவன் சேர்மானத்தைத் தேடிக்கொள்ளவும், அவன் மீது பக்தியை வைக்கவும், ஏனென்றால், அவர்கள் ஜெயம் பெறுவதற்காக"!

2. "நான் உங்கள் ஆண்டவனல்லவா?" "ஆமாம், நீ எங்கள் ஆண்டவன்." (ஆண்டவனுக்கு அடிமை வார்த்தைப்பாடு செய்தது) "நீ என் சொரூப அம்ஸமல்லவா?" "ஆமாம், நாங்கள் உன் சொரூப அம்ஸந்தான்"!

3. எவ்விதம் நான் முந்திப்படைப்புகளைப் படைத்தேனோ, அவ்விதமே நான் அதை மீளப்படைப்பேன். இஃது என் மீது வார்த்தைப்பாடு, அதை நான் செய்பவனாயிருக்கிறேன்!

4. "பிகில்" (சூர்) ஊதப்படுமானால் வானம்- பூமியிலுள்ளவர்கள் அடங்கலும் மூர்ச்சையாகி விடுவார்கள்! ஆண்டவன் யாரை நாடி இருக்கிறானோ, அவர்களைத் தவிர. நீக்கப்பட்டவர்களின் கருத்தாவது, எவர்களுக்குப் பெரிய பிரளயம் முந்தி ஆய்விட்டதோ, அவர்கள் பிரமத்தில் அழிந்தவர்களாயிருக்கிறார்கள். ஜீவக்குழல் அல்லது சுவாசக்குழலை ஊதப்படுமானால் பிரணவதொனி கிளம்பி விடுமென்பதாம்!

5. எல்லா வஸ்தும் அதன் அசலளவில் மீளும். ஆண்டவனுக்கு வானம் பூமியின் அனந்தரமாயிருக்கிறது. பிரம்மத்தைத்தவிர எல்லா வஸ்தும் அழியுமானதாயிருக்கிறது!

6. பிரளய காலம் வரப்போகிறது. நான் அதை மறைக்க விரும்புகிறேன். தின காலம் அவன் புதிய மகத்துவத்தில் ஆகிறான்!

7. ஆகிலும் அவர்கள் புதிய படைப்புகளில் உடுத்தாட்டப்பட்ட வர்களாயிருக்கிறார்கள். ஆண்டவனின் பாக்கியத்தை எண்ணுவீர்களானால் ஒரு போதும் எண்ண முடியாது!

8. மனிதர்களையும், பூத கணங்களையும், என்னை அறிந்து வணங்கவும், சத் கருமங்களைச் செய்யவும், அந்தச் சுகத்தை அவர்களே அனுபவிக்கவும் படைத்தேன்!

9. மார்க்கமாகிறது ஆண்டவனிடத்தில் "இஸ்லா"மாயிருக்கும். இஸ்லாமாகிறது மனிதனுடை இயற்கையில் வைக்கப்பட்டிருக்கிறது!

10. உண்மையாளரின் சாவகாசத்தைப் பின்பற்றுங்கள்! அவர்களின் பாதையைக் கற்றுக்கொள்ளுங்கள். அவர்களின் மீது உங்களுக்கு முந்தி கருணையாய் விட்டது!

11. ஆதியானவன் அந்தமானவன் அவனே! வெளியானவன், உள்ளானவன் அவனே! அவன் எல்லா வஸ்துக்களைக் கொண்டும் அறிந்தவனாயிருக்கிறான்!



# மதுரஸா நன்கொடை



### திருச்சி

தூத்துக்குடி Er. ஹாஜா முஹைதீன் சிறப்பு நன்கொடை ரூ. 5000 /– ம்,

நஜிமா H. அபிபுல்லா சிறப்பு நன்கொடை மதரஸா மாணவர்களின் உணவுக்காக ரூ. 1500 /– ம்,

மௌலவி ஹக்கீம் பாஷா யாஸீனிய் நன்கொடை மதரஸா மாணவர்களின் உணவுக்காக ரூ. 1500 /– ம்,

தூத்துக்குடி Er. ஹாஜா முஹைதீன் நன்கொடை ரூ. 5000 / – ம்,

முஹம்மது சதக்கதுல்லா (இப்றாஹிம் யாஸீனிய்) நன்கொடை மதரஸா மாணவர்களின் உணவுக்காக ரூ. 2000 /– ம்,

தூத்துக்குடி Er. ஹாஜா முஹைதீன் நன்கொடை ரூ. 5000 /– ம்,

தூத்துக்குடி Er. ஹாஜா முஹைதீன்நன்கொடை ரூ. 5000 /– ம்,

மர்ஹூமா ரோஜா பேகம் பெயரில் நன்கொடை உண்டியல் வசூல் மூலம் ரூ. 1300 /– ம்,

திண்டுக்கல் சலீம் நன்கொடை உண்டியல் வசூல் மூலம் ரூ. 1500 /– ம்,

S. முஹம்மது அனஸ் நன்கொடை உண்டியல் வசூல் மூலம் ரூ. 3430 /– ம்,

தூத்துக்குடி Er. ஹாஜா முஹைதீன் சிறப்பு நன்கொடை ரூ. 5000 /– ம்,

### சென்னை

H. முஹம்மது சதாம் & கதீஜதுல் குப்ரா நாச்சியார் நிய்யத் ரூ. 2000 /– ம்,

O.M.S. முஹம்மது சாஜித் நிய்யத் ரூ. 1000 /– ம்,

கலீல் நைனா முஹம்மது பூரண உடல்நலம் பெறவேண்டி ரூ. 500 /– ம்,

N. அஹ்மத் ஜலால்தீன் உண்டியல் ரூ. 6292 /– ம்,

அப்துல் மாலிக் & ஜுபைரதுல் புஸ்ரா திருமண நாளை முன்னிட்டு ரூ. 1000 /– ம்,

முஹம்மது ஹாரூன் உண்டியல் ரூ. 5840 /- ம்,

அஹ்மது நஜீஹ் நிய்யத் ரூ. 1000.

**மதுக்கூர்**

சிவக்கொல்லை ரைஸ்மில் ஓனர் சரவணன் தொழில் சிறப்படைய துஆ செய்ய மதரஸாவுக்கு நன்கொடையாக ரூ. 2005 /- ம்,

**R.** சேக் முஹம்மது பரீது & சுஹைனா மரியம் இவர்களின் திருமண நாளை (31.8.21) முன்னிட்டு நல்வாழ்விற்கு துஆ செய்ய மதரஸா பிள்ளைகளின் உணவுக்காக ரூ. 2000

மர்ஹூம் **M.** அப்துல் ரகுப் அன்னாரின் வருட ஹத்தம் பாத்திஹா ஓதி துஆ செய்ய பிள்ளைகளின் உணவுக்காக ரூ. 3000 /- ம்,

**A.** நஜீர் அஹமது & சஹீரா பானு இவர்களின் திருமண நாளை (25.8.21) முன்னிட்டு நல்வாழ்வுக்கு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

**A.** நஜீர் அஹமது பிறந்த நாளை (28.7.21) முன்னிட்டு நீண்ட ஆயுளுக்கு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

**N.** சஹீரா பானு பிறந்த நாளை (13.10.21) முன்னிட்டு மனநிம்மதியான நல்வாழ்வுக்கு துஆ செய்ய ரூ. 1000 /-

வளநாடு சகீலா சமது பூரண சுகத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய வேண்டி ரூ. 2000 /- ம்,

**N.** சஹீரா பானு நாட்டங்களும், தேட்டங்களும் நிறைவேற பூரண உடல் நலம் கருதியும் துஆ செய்ய ரூ. (500 + 500) 1000 /- ம்,

மர்ஹூம் **M.A.** முகம்மது தாஹீர் **HQ** அன்னாரின் வருட பாத்திஹா (14.9.21) ஹத்தம், யாஸீன் ஓதி துஆ செய்ய, மறுமை வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 3000 /- ம்,

**A.** ராஷீத் தைமூர் & ஹஜ் நஸ்ரின் இவர்களின் அன்பு மகனார் இபுறாஹிம் பிறந்த நாளை (2.9.21) முன்னிட்டு பிள்ளையின் நல்வாழ்விற்கும், ஆரோக்கியத்திற்கும் துஆ செய்ய நன்கொடை ரூ. 1500 /- ம்,

**K.**ஜீனத்துன்னிஸா தமது பரிபூரண உடல் நலத்துக்கு துஆ செய்ய வேண்டி மதரஸாவுக்கு நன்கொடை ரூ. 2000 /- ம்,

**M.A.** முஹம்மது யாக்கூப் தமது பரிபூரண உடல் நலத்துக்கும், நீண்ட வாழ்வுக்கும் துஆ செய்ய வேண்டி மதரஸா பிள்ளைகளின் உணவு செலவுக்காக ரூ. 5000 /- ம்,

**M.** ஜமால் முஹம்மது தமது நாட்டங்களும், தேட்டங்களும் நிறைவேறிட துஆ செய்ய பிள்ளைகளின் உணவு செலவுக்கு ரூ. 5000 /- ம்,

**A.** பலீலா அப்துல் மாலீக் மதரஸா பிள்ளைகள் செலவுக்கு நன்கொடை ரூ. 500 /- ம்,

ஆயிஷா பேகம் தமது பிள்ளை முகம்மது சமீர் அலி பூரண நலத்துடன் இருக்க துஆ செய்ய வேண்டி நன்கொடை ரூ. 500 /- ம்,

**K.R.K.** முபாரக்கா தனது மர்ஹூம் கணவர் அப்துல் மஜீது அவர்களின் மறுமை நல்வாழ்விற்கு துஆ செய்யவும் குடும்பத்தில் அனைவரும் சந்தோஷ-மன நிம்மதியாக வாழவும் துஆ செய்ய வேண்டி ரூ. 1000 /- ம்,

**B.** சித்தி பஷீர் உண்டியல் சேர்த்து மனநிறைவான வாழ்வுக்கு துஆ செய்ய நன்கொடை ரூ. 2110 /- ம்,

திண்டுக்கல் மஹபூபு சுபஹானி மதுரஸா நூலகத்திற்கு ரேக் வாங்கிக் கொடுத்து சகோதரியின் மகள் திருமணம் சிறப்பாக நடைபெற நிய்யத் செய்து ரூ. 6500 /ம்,

முஹம்மது மதீஹ் – முஹம்மது அஃப்ளழ் **S/o** முஹம்மது அமீன் ஆகியோரின் நோயற்ற நீடிய நல்வாழ்வுக்கு பதுருமவ்லிது ஓதி துஆ செய்ய நன்கொடை ரூ.1000/

ஹாஜ், ஹாஜியானி, மு.பீர் ஒலி –பாத்திமதுஸ்ஸஹ்ரா ஆலிமா அவர்களின் 35 ஆம் திருமண நாளை முன்னிட்டு பதுருமவ்லிது ஓதி, ஒற்றுமையான குடும்ப நல்வாழ்விற்கு துஆ செய்ய நன்கொடை ரூ.1000/-ம்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு வாப்பா நாயகம் அவர்களின் பொருட்டால் அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை நிறைவேற்றியருள்வானாக! ஆமீன் !**

## முக்கிய அறிவிப்பு.

அன்புள்ள வாசகர்களே! நன்கொடையாளர்களே!

மதுரஸா நன்கொடை அனுப்புவோர் கீழ்க்காணும் வங்கிக்கணக்கில் பணம் செலுத்தி 9941057785 என்ற எண்ணில் ஜனாப்.எஸ்.ஐ. தவ்லத் ஹக்கிய்யுல் காதிரி அவர்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**AWNIYYA WORLD PEACE TRUST. Canara Bank, Chennai Broad way Branch C.A.No. 1374201555699 IFS Coade CNRB 0001374**

சபை உள்ள ஊர்களில் செயலாளர்களிடம் செலுத்தும் போது அதன் விபரம் மறைஞானப் பேழையில் வெளியிடப்படுகிறது. சபை இல்லாத ஊர்களிலிருந்தோ, மதுரஸாவுக்கு நேரடியாகவோ, மணியார்டர் மூலமாக பணம் அனுப்பினாலோ 9944576165 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு விபரங்களை அனுப்பினால் மறைஞானப் பேழையில் வெளியிடலாம். *–மதுரஸா நிர்வாகம் –*

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களால்

பிரபஞ்சத்திற்கோர் அருட்கொடை எனப்பெயர் தரப்பட்டு

அதிரை ஷர்புத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் மற்றும் ஆசிரியர்

குழுவினரால் தயாரிக்கப்பட்டு திருச்சி நகரில் இ.யூனியன் முஸ்லிம்

லீக் தலைவர் முனீருல் மில்லத் கே.எம்.காதர் மைதீன் அவர்களால்

வெளியிடப்பட்டு **ரூ. 500 க்கு விற்பனை செய்யப்பட்ட**

# رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ

# ரஹ்மத்துன் லில் ஆலமீன்

# பிரபஞ்சத்திற்கோர் அருட்கொடை

எனும் நூல்

## புனித மீலாது மாதத்தை முன்னிட்டு

## சலுகை விலையில் ரூபாய் 300/–க்கு

## வழங்குகிறோம். (கொரியர் செலவு தனி)

- ***சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் கட்டுரை,***
- ***தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகள், கவிதைகள்,***
- ***அண்ணலாரின் முஹப்பத்தும் ஆன்மிகமும் கலந்து வரைந்த சொற்சித்திரங்கள்.***

**நூல் வேண்டுவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**


ஆலிம் புலவர். எஸ்.ஹுஸைன் முஹம்மது மன்பயீ

மௌலவி. என். ரபீவுத்தீன் ஆலிம் நூரீ

மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி வளாகம்,

ஜே.ஜே. பொறியியல் கல்லூரி அருகில், திண்டுக்கல் ரோடு, திருச்சி – 9

**செல்: 99445 76165 - 99437 86269**

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road, Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee